போஸ் வெளியீடு—1

655

ராஷ்ட்ரபதி

சுபாஷ் சந்திர - - போஸ்

அரு. காந்தி அண்ணாமலை

இயற்றியது

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

ஸி. என். முத்துரங்க முதலியார் அவர்கள்

சிறப்புரை கொண்டது.

போஸ் பிரசுராலயம்,

56, தம்பு செட்டித் தெரு,

சென்னை.

பதிப்புரிமை]

[விலை அணா 4

எங்கள் நன்றி

திரு. அரு. காந்தி அண்ணாமலை அவர்கள் எழுதிய "சுபாஷ் சந்திர போஸ்" எனும், இப்புத்தகத்திற்கு தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் அன்புடன் முகவுரை தந்தமைக்கும், இப்புத்தக ஆக்க வேலையில் மிகவும் ஈடுபட்டுழைத்த "ஊழியன்" உதவி ஆசிரியர் திரு. பி. ஆர். லால் அவர்கட்கும் திரு. ஆர். எஸ். வர்மா அவர்கட்கும் எங்கள் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சென்னை,
24-1-'38.

போஸ் பிரசுராலயத்தார்.

14962

முகவுரை

நம் ஒப்பற்ற தலைவர்களில் தியாகமே உருவாகக் கொண்டவர் ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸ். பால்ய வயதிலேயே சுகபோகங்களைக் கருதாது, பல இன்னல்களுக்குட்பட்டு தம் உயர்ந்த அறிவையும் ஆற்றலையும் தேச சேவைக்கென்றே பயன்படுத்தி உழைத்து வரும் ஒரு வீரத்தியாகி, இவ்வாண்டிற் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாரென்றால், தமிழ் நாட்டினர் இன்று அவரையே எதிர்நோக்கிப் பார்க்கின்றனர். சுதந்திரப் போராட்டத்தை இவ்வாண்டில் தலைமை வகித்து நடத்தப்போகும் ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸின் வாழ்க்கை விவரத்தை நம் மக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியமே.

எனவே, இச்சமயத்தில் ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸின் பெருமையையும், அவரது வாழ்க்கையின் ரகசியத்தையும் தமிழ் நாட்டினர் நன்கறிய, என் நண்பர் ஸ்ரீமான் காந்தி அண்ணாமலை ஒரு புத்தகம் எழுதி வெளியிட வந்திருப்பதை நான் பெரிதும் பாராட்டுகிறேன். நாம் ஒரு தலைவரைப் பின்பற்ற வேண்டுமானால், அவருடைய தன்மையை நன்கு தெரிந்து கொள்ளவேண்டும்.

ஸ்ரீயுத சுபாஷ் சந்திர போஸ் தேச விடுதலைக்காகவே துறவு பூண்ட விவரத்தை நாம் உணரவேண்டும். சிறைப்பட்ட காலத்திலும், நோய் வாய்ப்பட்ட காலத்திலும் கூட தளராத அவருடைய தேசபக்தியையும், வீரத்தையும், இப்புத்தகத்திலிருந்து நாம் காணலாம். இத்தகைய வீரமும், தேசபக்தியும், தியாக புத்தியும் நமக்கு அதிகமாக வேண்டும். எதிர்காலத்தில் சுதந்திரப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தவேண்டிய நமக்கு, இப்புத்தகம் வேண்டிய பயனை யளிக்குமென்றே நம்புகிறேன். புத்தகம் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. தமிழ் மக்கள் இப் புத்தகத்தை ஏராளமாக வாங்கி வாசிக்க வேண்டுகிறேன்.

மயிலாப்பூர்,
24—1—1938.

ஸி. என். முத்துரங்க முதலியார்.

ட :519.

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	விடுதலை வீரன்	...	1
2.	பிறப்பு - வளர்ப்பு	...	3
3.	மனமாற்றம்	...	8
4.	சுயராஜ்யக் கட்சி	...	14
5.	மாந்தலே சிறைக்கோட்டம்	...	17
6.	சிறைமீட்சி	...	25
7.	சுபாஷின் லட்சியம்	...	28
8.	சிறைக்குள் தேசியக்கொடி	...	32
9.	உப்புப் போர்	...	34
10.	வட்ட மேசை மகாநாடு	...	38
11.	வெளிநாட்டில் பிரசாரம்	...	40
12.	ரோமேன் ரோலந்து - சுபாஷ் சந்திப்பு	...	44
13.	ஏனோ இப்பதட்டம் !	...	53
14.	சுயராஜ்ய பவனத்தில் சந்திரர்	...	58
15.	லண்டனில் சுபாஷ்	...	63
16.	ராஷ்ட்ரபதி போஸ்	...	69
17.	வங்கத்தாய்	...	72

ஹரிபுரா

காங்கிரஸ் தலைவர் சுபாஷ் சந்திர போஸ்

சுபாஷ் சந்திர போஸ்

1. விடுதலை வீரன்

1928 டிசம்பர் 24-ம் நாள், இந்திய சரித்திரத்திலேயே பிரசித்திபெற்ற ஓர் திருநாள். சுதந்திரதாகங்கொண்ட இந்தியர்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெருநாள். அந்நாளில் வங்கத்தின் தலைநகரான கல்கத்தாவிற் கண்ட காட்சியை என்னென்று புகழ்வது! வீதியெங்கும் தோரணங்கள்—மாட மாளிகைகளின் சிகர மெங்கும் மூவர்ணக் கொடிகள்—கடல் மடை திறந்தாற் போல் வீதிகளில் எல்லாம் மக்கட் பிரவாகம்—என்ன அழகு! எவ்வளவு உணர்ச்சி! எத்துணை மகிழ்ச்சி!

தேசபந்து நகரில் கூடுகின்ற 43-வது காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவராய் தேச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அண்ணலை, அத்தியாக மூர்த்தியை வரவேற்கும் ஆனந்தத்தில் மக்களெல்லோரும் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தனர். பதினாறு குதிரைகள் பூட்டப் பெற்றிருந்த அழகியதோர் ரதத்தில் மன்னர் மன்னனுங் கண்டு மனம் புழுங்கும் வண்ணம் தலைவர் அமர்ந்திருந்தார். குதிரைப் படைகளும், காலாட் படைகளும், சைகிள் தொண்டர்களும் தேச சேவகிகளும் அணிவகுத்து ஊர்வலத்தை அழகு செய்தனர். ஊர்வலத்தின் முன்னணியில் அழகிய குதிரைமீது ஓர் இளஞ்சிங்கம் அமர்ந்திருந்தது. அதன் தோற்றமே அது போது அங்கே கூடியிருந்த மக்களின் கண்களை எல்லாங் கவர்ந்தது. "தோள் கண்டார் தோளே கண்டார்" என்று கம்ப

நாடர் சித்தரித்ததே போல் மக்கள் அனைவரும் இவ்வங்க வீரனையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அன்னவனின் விரிந்த நெற்றியும், வீரப்பார்வையும், சிவந்த கன்னங்களும், அடர்ந்த புருவமும், ஆண்மை துலங்கும் உடல்கட்டும் பார்ப்பவர் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சியைக் கிளப்பிவிட்டன. இங்கிலாந்தில் ஐ. ஸி. எஸ். பட்டம் பெற்ற அவ்இளைஞன் சிவில் உத்தியோகஸ்தர்களி லொருவனாய், அதிகாரப் பதவியிலமர்ந்து, ஆணை செலுத்தியன்றோ வரவேண்டும்? நிலைமை அவ்வாறிருக்க அன்னவன் சேனாதிபதியின் உடையணிந்து இந்தியத் தொண்டர் படைக்குச் சேனாதிபத்தியம் செலுத்திச் சென்ற காட்சியைக் கண்ட எவர்தான் அதிசயிக்காமல் இருப்பர்!

டிசம்பர் 28-ம் நாள் காலையில் தலைவர் பண்டித மோதிலால் நேரு தேசீயக் கொடியைப் பறக்க வைத்தார். அச்சமயத்தில் தொண்டர் படைத் தலைவராகிய சுபாஷ் சந்திரர் மூவகைப் படைகளையும் அணியணியாக வகுத்து மகா சபைத் தலைவரை வரவேற்ற வைபவம் கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது.

கற்றது மேனாட்டுக் கல்வி. பெற்றது மிக உயர்ந்த பட்டம். உற்றது அயல்நாட்டு நாகரிகம். ஆனால் ஏற்றது சந்நியாசம். ஆம், 'சந்நியாசம்' என்று அழைக்காமல் அவர் வாழ்க்கையை வேறெவ்விதம் அழைப்பது? ஒருவர் தமது ஒப்புயர்வற்ற இளம்பருவத்தை துன்பமும், கொடுமையும், பிணியும், பொறுமையும் மல்கிய விடுதலைப் போராட்டத்தில் தாமாகவே ஈடுபடச் செய்து உழைத்து வருகிறார் எனின், அதற்குரிய அரசியல் நிகழ்ச்சிகளையும் அவரது வாழ்க்கை ரகசியத்தையும் அறிந்துகொள்ள வேண்டியது பாரத மக்களின் தலையாய கடமையே யாகும்.

2. பிறப்பு—வளர்ப்பு

வங்காளத்தின் மத்தியிலிருக்கும் இருபத்து நாலு பர்காணுக்களைச் சேர்ந்தது கொடாலி எனும் கிராமம். 1897-ம் வருடத்தில் சுபாஷ் சந்திரர் இக்கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தையாரான ஜானகி நாத போஸ் சிறந்த கல்வியாளர்; சட்ட நிபுணர். இவர் சிறந்த வழக்கறிஞரென கட்டாக் நகரெங்கும் பிரசித்தி பெற்றிருந்தார். இவரது தாயார் எட்டு மகவுகளை ஈன்றெடுத்தனர். உத்தமகுணம் படைத்தவர். ஒருக்கால் வீர நெப்போலியன் "நல்ல தாய்மார்களைப் பெறுதலைவிட பிரான்ஸ் தேசத்திற்குப் பெருந்தனம் வேறொன்றும் இல்லை," என்று கூறினார். இத்தகைய தாய்மார்களைப் பற்றியே அவர் அவ்வாறு கூறியிருக்கவேண்டும். தாயின் அன்பு அற்புத ஆற்றல் வாய்ந்த தன்றோ! மகாத்மாவின் அன்னையாராகிய புத்திலி பாயின் சிரத்தை மிக்க வளர்ப்பினாலன்றோ அவர் இன்று உலகனைத்திற்குமே ஒரு மோகன காந்தி வீசும் சந்திரனாய்த் திகழ்ந்து வருகிறார்!

சுபாஷ் சந்திரருடன் பிறந்த குழந்தைகள் எல்லோருமே கல்வித் தேர்ச்சியாலும், செல்வச் சிறப்பாலும் பிறந்த நாட்டிற்குப் பெருமையை விளைவித்தனர். வங்காள மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், தலைசிறந்த சட்ட நிபுணருமான சரத் சந்திர போஸும், பிரபல வைத்திய நிபுணரான சுநீல சந்திர போஸும் சுபாஷின் சகோதரர்களேயாவர். கவி ரவீந்திரர் கூறியது போல், தாய் நாட்டின் சரித்திரத்தை தன் நாட்டெல்லையையுங் கடந்து உலக சரிதத்துடன் தொடர்பு கொள்ளச் செய்த ஜகதீஸ் ஜந்திர போஸ் எனும் நறுமலர் இப் போஸ் வம்சக் கொடியிலேயே மலர்ந்தது. தாவர உலகிற் செய்த தம் நுண்ணிய ஆராய்ச்சியால் உலகை பிரமிக்கச்

செய்த இப்பெரியார் சென்ற நவம்பர் 22-ம் நாள்தான் உயிர் நீத்தார்.

சுபாஷ் சந்திரர் கூர்ந்த மதியுடையவர். சுருசுருப்பாக வேலை செய்யும் இயல்புடையவர். இவரிடம் பொருள் நுட்பங்களை உணர்ந்து கொள்ளும் திறமை அதிகம். தமது மாணவப் பருவத்தில் ஒரு வகுப்பிலாயினும் தோல்வியுற்றது கிடையாது. மெட்ரிகுலேஷனில் தேர்ச்சி பெறும்போது சுபாஷுக்கு வயது பதினாறு. அதற்குப்பின் கல்கத்தா மாகாணக் கல்லூரியில் சேர்ந்து வாசிக்கலானார். இண்டர்மீடியெட் முதலாவது வகுப்புப் பரீட்சையில் மாகாணத்தில் இரண்டாவது மாணவனாகத் தேர்ச்சி பெற்றார்.

விளையும் பயிர் முளையிலே தெரியுமல்லவா? சுபாஷ் சந்திரர் மாணவனா யிருக்கும் போதே தற்போது அவர் பெற்றிருக்கும் பெருமையின் அறிகுறிகள் அவரிடம் மின்வெட்டுகள் போல் மிளிர்ந்து கொண்டிருந்தன. பொதுவாக ஒவ்வொரு மாணவனிடமும் ஏதேனும் சில சிறப்பு இயல்புகள் அமைந்திருப்பது இயற்கை. அவ்வியல்புகள் நல்வழிப்படுத்தப்பெறும் அளவிற்கே உயர்வும் தாழ்வும் ஏற்படுகின்றன. நமது சுபாஷ் இயல்பாகவே அன்பும் அருளும் தோய்ந்த இதய முடையவர். பிறர் துன்பத்தைக்கண்டு மனம் பொறுக்க மாட்டார். ஆகவே, கலாசாலையின் சுவர்களுக்குள் கட்டுண்டு கிடந்த இவரது உள்ளம் வெளியுலகத்தி லிருக்கும் உயிர்களை நாடிப் பரந்து கொண்டே சென்றது. ஆதலால் கிணற்றுத் தவளைகளைப்போல் வெளியுலகத் தொடர்பு இல்லாமல் வாழும் சில மாணவர்களைப் போல் குறுகலான லட்சியத்தைக் காட்டும் கல்வியின்மீது அவர் மோகங் கொள்ளவில்லை. கலாசாலை அட்டவணைக்குட் படாத புத்தகங்களை வாசித்து அறிவைப் பெருக்கி வந்தார். பத்திரிகைகளை வாசித்து நாட்டின் அரசியல் நிலைமையையும் ஆராய்ந்து கொண்டே வந்தார்.

சுபாஷ் சந்திரர்க்கு சமய நூற்களிலும் பற்றுண்டு. அதன் பயனாக துறவறத்தில் நாட்டங் கொண்டு வீட்டையும் கலாசாலையையும் துறந்தார். புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை போய் ஆங்காங்கே யிருந்த சந்நியாசிகளைக் கண்டு பேசினார். தமக்கு ஆத்ம ஞானம் பெறுவதற்கு ஓர் குருதேவரைத் தேடியடைய வேண்டுமென்பதே அவரது அவா. ஆனால், இம்முயற்சியில் சுவாமி விவேகானந்தரைப் போல் இவர் வெற்றி பெறவில்லை. உலகத்தவர்க்குப் பயன் படாமல் பதுங்கி வாழும் சந்நியாசிகளின் வாழ்க்கை அவருக்கு வெறுப்பை யூட்டிற்று. அவர்களது புறக்கோலமும், புகை பிடிக்கும் பழக்கமும், அவரது சமய உணர்ச்சியை மாற்றிவிட்டன. எனவே சுபாஷ் சந்திரர் தமது தாயின் அன்பும், தந்தையின் நல்லறிவும், சகோதரர்களின் கலைத்திறமையும் பொருந்தி விளங்கும் தமது வீட்டிற்கே திரும்ப வந்து கலாசாலைப் படிப்பை மேலும் விருத்தி பண்ண முயன்றார்.

1915-ல் இண்டர்மீடியெட் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்று, பி. ஏ. (ஆனர்ஸ்) வகுப்பில் சேர்ந்தார். அவர் சிறப்பாகக் கற்றுவந்த விஷயம் தத்துவ சாஸ்திரம். இக்காலத்தில்தான் முதன்முதலாக சுபாஷின் சுய மரியாதை உணர்ச்சியும் சுதந்தர வேட்கையும் பரிசோதிக்கப்பட்டன. இவ்வுணர்ச்சிகள் மனிதனின் பிறப்புரிமைகள் அல்லவோ? இவற்றைக் காப்பாற்றவே மனிதன் தன் உயிரையும் தியாகம் செய்து விடுகின்றான். இத்தகைய உரிமைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணம் செய்து கொள்ளும் உத்தமர்களிடையிருந்தே மகாத்மாக்களும், லோகமான்யர்களும், தேசபந்துக்களும் தோன்றுகின்றனர்.

ஓர் நாள் சுபாஷ் கற்றுவந்த கல்லூரி ஆசிரியர் சி. எப். ஓட்டன் என்பவர் இந்திய மாணவர்களின் மனம் புண்படும்படியாக ஏதேதோ பேசி விட்டார். இவர் ஓர் ஆங்கிலேயர்.

மாணவர்கட்கிடையே பெரும் பரபரப்பு உண்டாயிற்று. தேசிய உணர்ச்சி பெற்ற மாணவர்களின் மனம் தாழவில்லை. சுபாஷின் தலைமையில் மாணவர்கள் கட்டுப்பாடாக கலாசாலையைவிட்டு வெளியேறினர். சுபாஷும் வெளியேறினர்.

சுபாஷ் சந்திரரின் சுயமதிப்புக்கு அதிகாரிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வது இழிந்ததோர் காரியமாகத் தோன்றியது. சுயமரியாதையையும் விற்று தமது வாழ்வைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று யோசிக்கலானர். தமது சுயமதிப்பு ஓர்புறமிருக்க, தேசியகௌரவமன்றோ அலக்கழிக்கப்பட்டது! பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவன்றோ? ஆதலின் தனது எதிர்காலக் கல்வி வளர்ச்சியையும் பொருட்படுத்தாது கல்லூரி வாழ்க்கையை உதறித் தள்ளினர். இவ்வணங்காமுடி மன்னனைக் கண்ட அதிகாரிகள் அவனைக் கலாசாலையினின்று நீக்கிவிட்டனர்.

இவ்வித நிலைமையில் இரண்டு ஆண்டுகள் கழிந்தன. ஆனல் தமது கலாசாலைப் படிப்பை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று மீண்டும் ஆசைப்பட்டார். கலாசாலையில் திரும்பவும் சேர்ந்து கொள்வது எளிய காரியமன்று. ஆயினும் சர். அஷுடோஷ் முகர்ஜீயின் அரு முயற்சியால் 1917-ல் ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப் பட்டார். அங்கே தத்துவ சாஸ்திரம் பயின்று முதன்மையாய் தேர்ச்சி பெற்றார். அதன்பின் 1919-ல் உயர்தரக் கல்வியின் பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். ஐ.ஸி.எஸ். பரீட்சையிற்கலந்து நாலாவது மாணவனுகத்தேறினர். இச்சமயத்தில் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் சேர்ந்து உளநூல் பயிற்சியும்பெற்று பி. ஏ. பட்டதாரியானர்.

சுபாஷ் தாய் நாட்டிற் பெற்ற பட்டங்களுடன் இங்கிலாந்திலும் பட்டங்களைப் பெற்றார். அவற்றுள் மேலானது

ஐ. ஸி. எஸ். பட்டம். கல்வித் தேர்ச்சிக்குத் தகுந்தவாறு உடலமைப்பும் வாய்ந்திருந்தது. எத்தகைய உயர்ந்த உத்தியோகத்தையும் நிர்வகிப்பதற்குத் தக்க கம்பீரத் தோற்றம். பிறப்பாலும், சுற்றுச் சார்பினாலும், கல்வித் தேர்ச்சியினாலும், உயர்ந்த நிலைமையில் வீற்றிருந்த சுபாஷ் சந்திரருக்கு தேசத்தின் அரசாங்க நிர்வாகத்தில் ஓர் பெரும் பதவி காத்துக் கொண்டிருப்பதாய் மக்கள் நினைத்திருக்கக் கூடும். ஆயின் அதுபோது அவரது சித்தம் எவ்வாறிருந்ததோ? இந்தியாவிலோ எனில் பாரத மக்களின் மனதிற் புரட்சி உணர்ச்சிகளைத் திடீரெனப் பிறப்பிக்கும் பல நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்து கொண்டே வந்தன.

3. மன மாற்றம்

சுபாஷ் சந்திரர் பம்பாயில் காலடியெடுத்து வைத்ததும் தேசத்தின் பயங்கர நிலையைக் கண்டு திடுக்கடைந்தார். பஞ்சாப் படுகொலையால் பெருக்கெடுத்த இரத்தப் பெருவெள்ளத்தின் கறை இன்றும் மறையவில்லை. இந்தியர் மனம் கொதித்துக் கொதித்துப் பொங்கிக் கொண்டிருந்தது. மகா யுத்தத்தின் பிறகு பிரிட்டிஷ் மக்கள் இந்தியர்க்கு நல்குவதாக வாக்களித்திருந்த அரசியற் சுதந்திரம் ஊமையன் கண்ட கனவாயிற்று. ஆனால் மிகக் கொடிய ரௌலட் சட்டமும், அதன் பின் விளைவாகிய பஞ்சாப் படுகொலையும், மாண்டேகு செம்ஸ் போர்ட் அரசியல் சீர்திருத்தமும் அரசாங்கத்தின்மீது மக்கட்கிருந்த நம்பிக்கையை மாய்த்துவிட்டன. தேசம் தலைவர்கள் காட்டும் வழியைப் பின்பற்றி நடக்கக் காத்துக் கொண்டிருந்தது. வாலிபர் உள்ளமோவெனிற் சொல்லவும் வேண்டுமோ! வங்க வாலிபர் பலர் புரட்சிக்காரர்கள் என்ற குற்றச் சாட்டிற்கு ஆளாயினர். அவர்களை பந்தோபஸ்துக் கைதிகளாய்ச் சிறையில் அடைத்து வைத்தனர் சர்க்கார்.

சுபாஷ் சந்திரரின் இயல்பாகவே இளகிய இதயம் இந்நிலையைக் கண்டு கொந்தளித்தது. அமிர்தஸரஸில் நிரபராதிகளான ஆடவரும், பெண்டிரும் அருமைப் பிள்ளைகளும், ஜனரல் டயரின் குண்டு மாரியிற் பட்ட பாட்டை எவரது உள்ளந்தான் அமைதியுடன் கேட்டுக் கொண்டிருக்கும்? அது காலை பாஞ்சாலத்தில் மக்கள் உள்ளக் கோவிலில் குடி கொண்டிருந்த தலைவர்கள் டாக்டர் சத்யபாலும் டாக்டர் கிச்சுலுவும் ஆவர். ரௌலட் சட்ட கண்டன தினத்தை அமைதியாய் நிறைவேற்றி வைத்த இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அற்புதத்தைக் கண்ட சர்க்கார் பிரமித்துச் சித்தங் கலங்கியது. நிலைமையறியப் பஞ்சாபுக்குச் சென்ற மகாத்மா

காந்தியையும் இந்திய அரசாங்கம் கைது செய்து பம்பாய்க்குத் திரும்ப அனுப்பி விட்டது.

பாஞ்சாலத்தில் படுகொலை நிகழ்ந்த ஜாலியன் வாலா பாக் எனும் தோட்டத்தில் உயிர்விட்ட மக்கள் நூற்றுக் கணக்கினர். காயம்பட்டவர் ஆயிரக்கணக்கினர். படுகொலை நிகழ்ச்சிக்கு உரிய காரணத்தை விசாரணை செய்ய பண்டித மதன் மோகன மாளவ்யா பாஞ்சாலம் சென்று நிலைமையைத் தீர விசாரித்து மீண்டார். ராஜப் பிரதிநிதியின் சட்ட சபையில் அவர் அடுக்கடுக்காகக் கேட்ட தொண்ணூறு கேள்விகளுமே படுகொலையின் முழு விவரத்தையும் நாட்டு மக்கட்கு எட்டச் செய்தன. ராணுவச் சட்டத்தின் கீழ் பாஞ்சால மக்கள் பட்ட துயரத்தை இங்கே விரித்துரைக்க இயலாது. "சுட்டேன், சுட்டேன். குண்டு தீரும் வரையில் சுட்டேன்," என்று செருக்குடன் சொல்லிய டயரையும், அவனுக்கு ஆதரவு ஈந்த ஓட்வியரையும் வேலையை விட்டகற்ற வேண்டுமென்று தேசமக்கள் யாண்டும் கிளர்ச்சி செய்தனர். அரசாங்கம் அதைக் கண்டு திகைத்தது. ஓர் விசாரணைக் கமிட்டியையும் ஏற்படுத்திற்று. அக்கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் ஐரோப்பியர், இந்தியர் ஆகிய இருதரத்து அங்கத்தினர்களும் வெவ்வேறுவித அபிப்பிராயங்களைத் தந்திருந்தனர். ஜெனரல் டயர் வைரம் பதிக்கப்பெற்ற பட்டாக் கத்தியும், பணமுடிப்பும் பிரிட்டிஷாரால் பரிசளிக்கப் பெற்ருன். பஞ்சாப் அநீதத்திற்குக் காரணஞன ஓட்வியரின் ஆட்சிகாலம் நீடிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இச்செயல் வெந்த புண்ணிற் கோலிடுவது போலாயிற்று. இச்சமயத்தில் இந்திய முஸல்மான்களும் தமது மதத் தலைவராகிய துருக்கி சுல்தானுக்கு இழைக்கப்பட்ட பேரவமானத்தையும் கிலாபத்தின் வீழ்ச்சியையும், உன்னி உன்னி, மனங் கொதித்தனர். இத்தகைய நிலைமையில்

1919 டிசம்பரில் அமிர்தஸரசில் 34-வது காங்கிரஸ் மகாசபை நடைபெற்றது. நாட்டின் முடிசூடா மன்னராய் விளங்கிய பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்தார். திலகரும் காந்தியும் இக்காங்கிரஸுக்கு விஜயம் செய்தனர். மக்களுக்கு இங்கிலாந்தின் மீதிருந்த நம்பிக்கை யனைத்தும் ஒழிந்தது. தமது குறைகளைப் பரிகரித்துக் கொள்ள அரசாங்கத்துடன் ஒத்துழைக்கலாகாதென்ற ஆலோசனை பிறந்தது.

1920ஆல் நாகபுரியில் கூடிய 35-வது காங்கிரஸ் மகா சபைக் கூட்டத்தில் தேச மக்கள் அனைவரும் ஏகோபித்து 'சைத்தான் ஆட்சி'யை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒத்துழையாத் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இதன் பயனாக அரசாங்கப் பட்டங்கள் தூக்கி எறியப்பட்டன. கவி சிரேஷ்டரான ரவீந்திரநாத தாகூர் தமது "ஸர்" பட்டத்தை நிராகரித்து ராஜப் பிரதிநிதிக்கு வரைந்த நிருபம் சரித்திரப் பிரஸித்தி பெற்றது. வைஸ்ராயின் நிர்வாக சபையின் அங்கத்தினர் பதவி வகித்துக் கொண்டிருந்த ஸர். சங்கரன் நாயர் பஞ்சாப் அட்டூழியத்தை மிலேச்சத்தன மிக்க மிருகச் செயல் என்று கண்டித்துத் தமது அங்கத்தினர் பதவியை ராஜீநாமா செய்தார். மாணவர்கள் தமது ஒப்புயர்வற்ற எதிர்கால வாழ்க்கையை மறந்து கல்லூரி வாழ்க்கையைத் துறந்தனர். இவர்களில் நூற்றுக்கணக்கானவர் இன்றைக்கும் வறுமை நோயால் வாட்டமுற்று வாழ்க்கையில் உறுதியான நிலை யடையாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். வழக்கறிஞர்கள் தமது வக்கீல் தொழில்களை விட்டனர். பல்லாயிரக் கணக்கில் பணத்தைத் தேடிக் குவித்துக் கொண்டிருந்த பண்டித மோதிலால் நேருவும், சித்தரஞ்சன தாஸரும் இக்காலத்திலேயே தமது வக்கீல்தொழில்களை இழந்து, கதர் உடுத்தி சாதாரண மக்களைப்போல் தோற்ற ஆரம்பித்தனர். சட்ட சபைகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்ற திட்டமும், சட்ட

சபைகளின்மீது மக்கட்கிருந்துவந்த மோகத்தைக் குறைத்துக் கொண்டே வந்தது. குடிசைகளில் ராட்டைகள் சுழல ஆரம்பித்தன. எனவே "பொங்கியது எங்கும் சுதந்திரநாதம்." சுருங்கக் கூறின், இச்சமயத்தில் காங்கிரஸ் அரசியல் நிலைமையில் மகத்தான மாறுதல் உண்டாகி விட்டது. காங்கிரஸின் கொள்கையிலும் போராட்டத்தின் தன்மையிலும் முற்றிலும் மாறுதல் ஏற்படலாயிற்று. சத்தியாக்கிரகத்தின் வாயிலாகப் போராட்டமுறையை, நடத்துவதெனத் தலைவர்கள் தீர்மானித்தனர். பலாத்காரமற்ற ஒத்துழையாமை, சட்டமறுப்பு என்பவை எல்லாம் இப்போராட்ட முறையின் தோற்றங்கள்.

சுபாஷ் சந்திரர் இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டே யிருந்தார். தேசபந்து சித்தரஞ்சன தாஸரின் தியாகச் சுடர் வங்க மக்களைத் தட்டி எழுப்பி விட்டது. "இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டு"மென தேசபந்துவின் மனைவியார் வசந்தா தேவி நாட்டுக்கு ஓர் செய்தி விடுத்திருந்தார். சர்க்கார் அதிகாரிகளின் அடக்கு முறைகள் அதிகரித்தன. எனினும் மக்கள் எத்தகைய தியாகம் செய்வதற்கும் தயாராகவேயிருந்தனர்.

அப்போது ராஜப்பிரதிநிதியாக விருந்தவர் லார்ட் ரீடிங். இவர் இங்கிலாந்தின் இளவரசரை இந்தியாவுக்கு வரவழைத்து மக்களின் ராஜ பக்தியைத் தூண்டுவதன் மூலமாய் ஒத்துழையா இயக்கத்தை நசுக்கிவிட முயன்று கொண்டிருந்தார். 1921 நவம்பர் 17உ இளவரசர் பம்பாயில் வந்திறங்கினார். இளவரசர் வரவேற்பில் இந்தியர் எவரும் கலந்து கொள்ளக் கூடாதென்று காங்கிரஸ் மகாசபை கட்டளை யிட்டது. இளவரசரின் வரவேற்பைச் சிறப்பிக்கும் நோக்கத்துடன் அதிகாரிகள் (சிறையிற் கிடந்த) தேசபந்து முதலான தலைவர்களிடம் சமரஸம் பேசினர்.

ஆனால், அலி சகோதரர்களை விடுதலை செய்வதாகவும், மாகாண சுயாட்சி தருவதாகவு மிருந்தால் மட்டிலுமே தாம் சமரஸத்திற்கு இசைவதாக மகாத்மா கூறிவிட்டார்.

அச்சமயத்தில் சுபாஷ் சந்திரரும் தமது ஐ. ஸி. எஸ். பட்டத்தை நிராகரித்தார். தமது வக்கீல் உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்தார். வங்க சிங்கமாகிய தேசபந்துவிற்கு வலக்கரமானார். சுபாஷின் திறமையையும், அஞ்சா நெஞ்சையும், விடுதலை வேட்கையுங் கண்டு சித்த ரஞ்சனரின் உள்ளம் பூரித்தது. எனவே, சித்தரஞ்சனர் 1921 மே மாதம் சுபாஷ் பாபுவை வங்காள தேசியக் கலாசாலையின் பிரின்ஸிபாலாக நியமித்தார். பின்னர் அவ்வாண்டிலேயே அவர் இந்திய தேசியத் தொண்டர் படைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

ஐ.ஸி.எஸ்., எனின் ஆங்கில நாகரிகப் பாதுகாப்புக்கு உழைப்பவன்—ஏகாதிபத்தியத்தின் ஆக்கத்திற்கு துணை புரிபவன்—உத்தியோக வருக்கத்திற்கு உரமூட்டுபவன், என்பது பொருள். இவர்களது உதவியினாலேயே இந்திய அரசாங்க நிர்வாகம் நடாத்தப்பட்டு வருகின்றது. எல்லா வழியாலும் இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் நலன்களையே தமது வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு இந்நாட்டில் வாழவேண்டியவர்கள் ஆவர். ஆனால் பாபு சுபாஷ் அரசாங்க வழிபாட்டைத் துறந்து தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டு விட்டார். எந்த அரசியலைத் தாம் வளர்க்க வேண்டுமோ அதன் அழிவிற்கே வகை தேடும் ஸதாபனமாகிய காங்கிரஸின் தொண்டராக மாறிவிட்டார். அப்போது வங்காளத்தில் அதிகாரஞ் செலுத்திக்கொண்டிருந்தவர் லார்டு ரொனால்டுஷே. சுபாஷ் சந்திரரால் அதிகார வருக்கத் தேவதைகட்கு இழைக்கப்பட்ட பேரவமானத்தைச் சகித்துக்கொண்டிருக்க அவரால் இயலாது போயிற்று. எனவே சுபாஷ் சந்திரரைக் கைது செய்யக் கட்டளை பிறப்பித்தார். அப்போது தாய்நாட்டுச்

சேவையின் தேர்ச்சிக்கு அறிகுறியான சிறை வாழ்க்கையை சுபாஷ் சந்திரர் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. நாடெங்கும் வீரவொளி வீசி, அடிமை மனப்பான்மை எனும் இருளை அழித்துவந்த சந்திரனை கடினகாவல் எனும் கார்முகில் மறைத்தது. சுபாஷ் ஆறுமாதம் தண்டனை பெற்றார். நசுக்குண்ட சுகந்த மலர் இனிய மணம் வீசுவதேபோல் சிறை வாழ்க்கையால் அல்லலுற்ற சுபாஷின் வாழ்க்கையும் பயன் தரும் நெறியில் பண்படைந்துகொண்டே வரலாயிற்று.

அக்காலத்தில் வட வங்காளத்திற்கு ஓர் பெரும் துயரம் விளைந்தது. இயற்கை அன்னை சீறலுற்றாள். திடீரென தோன்றின பெரு வெள்ளத்தால், உயிர்களும் பொருள்களும் மாய்ந்தன. பசித்தழல் மிக்க ஓர் கடும்பாம்பென கரை புரண்டோடும் பேராறு வீடுகளையும், மரங்களையும் பயிர்களையும், ஏழை மக்களையும் விழுங்கிப் பாய்ந்தது. அம்மம்மா! ஏழை மக்கள் பட்டபாட்டை வருணித்தல் அரிது, அரிது. பஞ்சம் தலைகாட்டிற்று. உடனே மக்களுக்கு ஆறுதலளிக்கும் நிவாரண வேலையைக் காங்கிரஸ் மகாசபையார் ஆரம்பித்தனர். வங்காள நிவாரணக் கமிட்டியின் காரியதரிசியாக சுபாஷ் சந்திரரே நியமிக்கப்பெற்றார். இக் கமிட்டியில் ஒரு சிறிதும் உள்ளங்குன்றாது இரவு பகலாய் ஈடுபட்டுழைத்து வந்த பாபுவின் தியாகம் விளக்கிறற் பெருகும்.

4. சுயராஜ்யக் கட்சி

காந்தியடிகளால் துவக்கப்பெற்ற ஒத்துழையா இயக்கம், காட்டுப் பெரு நெருப்புபோல் யாண்டும் பரவி வந்தது. அதைக்கண்ட அரசாங்கம் திகைத்தது. ஆனால், ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த சௌரி சௌராவில் நடைபெற்ற பெருங்கலகமும், உயிர்ச்சேதமும் கொள்ளையுங் கொடுமையும் மகாத்மாவின் மனதைக் கலைத்துவிட்டன. காந்திஜீ காரியக் கமிட்டியின் சம்மதம் பெற்று ஒத்துழையாத் திட்டத்தை திடீரென நிறுத்திக்கொண்டார். தருணம் பார்த்துக்கொண்டிருந்த ராஜப்பிரதிநிதியான லார்ட் ரீடிங் அவரைக் கைது செய்ய உத்தரவளித்தார்.

காந்திஜீ சிறைப்பட்டார். ராஜத்துவேஷக்குற்றத்திற்காக ஆறுவருடம் தண்டிக்கப்பெற்றார். நாளடைவில் ஒத்துழையா உணர்ச்சியும் சிறிது தளர்ந்து வரவே, சட்டசபைக்குள் புகுந்து சுயராஜ்யப்போர் தொடுக்கவேண்டும் என்ற எண்ணம் தலைவர்களிடையே பிறந்தது. பண்டிதமோதிலால் நேருவும், தேசபந்து தாஸரும் 'சுயராஜ்யக்கட்சி' எனும் புதுக்கட்சியின் சார்பில் சட்டசபைப் பிரவேசத்திட்டத்தைப் பற்றி நாடெங்கும் முழக்கலாயினர்.

1922 டிசம்பரில், கயா நகரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. தேசபந்து தாஸ் தலைமை தாங்கினார். சட்டசபைப் பிரவேசத் தீர்மானம் பிரதிநிதிகட்கிடையே பெருங் கொந்தளிப்பை உண்டு பண்ணியது. எதிர்ப்பு பலமாயிருந்தது. பண்டித மோதிலால் நேருவும், ஸ்ரீ. சீனிவாச ஐயங்காரும், சுபாஷ் சந்திரருமே அத்தீர்மானத்தை ஆதரித்துத் தீவிரமாகப் பேசினர். ஆயினும் தீர்மானம் தோல்வியுற்றது.

ஆனால் 1923 செப்டம்பர் 15-ம் நாள் டில்லியில் நடந்த விசேஷக் காங்கிரஸில் சட்டசபைப் பிரவேசத்திற்கு ஆதரவு

கிட்டியது. காந்திஜீயும் அவரைப் பின்பற்றும் மாறுதல் வேண்டாக்கட்சியாரும் புதுக்கட்சியார்க்குச் சந்தர்ப்பமளிக்க முந்தினர். சுயராஜ்யக்கட்சி உதயமாயிற்று. அதன் தலைவர் சித்தரஞ்சனர். பண்டிதமோதிலால்நேரு அதன் காரியதரிசியாகவும், பாபு சுபாஷ் சந்திரர் கட்சியின் விளம்பர அதிகாரியாகவும் அமர்ந்தார்கள். சட்டசபைத் தேர்தல் ஆரம்பமாயிற்று. இதுபோழ்து சுபாஷ் சந்திரர் செய்தவேலை நிகரற்றதெனலாம். வங்காளத்தின் ஒவ்வொரு இடங்களிலுமுள்ள மக்களைத் தட்டி எழுப்பினார். தமது கட்சியின் கொள்கைகளை யாண்டும் தெளிவாய் எடுத்துரைத்தார். இரட்டை ஆட்சிக் கோட்டையைத் தகர்த்து அதிகாரவர்க்கத்தினரைத்திணறச் செய்யவேண்டுமென்ற அவரது கட்சியின் கொள்கைக்கு வங்காளம் பேராதரவு காட்டிற்று. எனவே, தேர்தலில் பெருவாரியான காங்கிரஸ் மக்கள் சட்டசபைக்குள் புகுந்தனர்.

கட்சி நோக்கங்களை பிரசுரிப்பதற்காக 'பார்வர்ட்' (Forward) அல்லது 'முன்னேற்றம்' என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. சுபாஷ் சந்திரர் அதற்குப் பிரதம ஆசிரியராய் அமர்ந்து பத்திரிகையைத் திறம்பட நிர்வகித்து நடத்தினார்.

சித்தரஞ்சனதாசரின் செல்வாக்கும் சுபாஷ் சந்திரரின் ஆண்மையும் வங்காளத்தைக் காங்கிரஸ் வழித்திருப்பியிருந்தது. கல்கத்தா நகரசபை, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சிக்காரர்கள் வசமாயிற்று. 1924-ல் சுபாஷ் சந்திரர் அந்நகர சபையின் பிரதம காரியஸ்தராக நியமிக்கப்பெற்றார். மாதம் 1500 ரூபாய் சம்பளம். இப்பெரும் பதவியை, நடுநிலைதவறாமலும், தேசீய கௌரவத்திற்கு ஊனம் விளையாமலும் நிர்வகித்துவந்தார் நமது பாபு. யாண்டும் தேசீயமயமாதல் கண்டு சர்க்கார் அஞ்சியது. சுயராஜ்யக் கட்சியினர் சட்டசபைக்குள் புகுந்து அரசாங்க நடவடிக்கைகளைக் கண்டித்து வருவதைக்

கண்ணுற்ற லிட்டன் பிரபுவுக்குப் பொறுக்க முடியாத கோபம் பிறந்தது. எதேச்சாதிகாரமாய் நடாத்தப்பெற்றுவந்த காரியங்கட்கெல்லாம் தடைமுறைகள் ஏற்படுத்தப்பட்டுவரும் நிலைமையை அவரால் பொறுத்துக்கொண்டிருப்பது இயலாத காரியமாயிற்று. எனவே, 1915-ம் வருடத்தில் பிறப்பிக்கப் பட்ட இந்தியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற ஒரு வங்காள அவசரச் சட்டத்தை அவர் பிறப்பித்தார். அதன் பலனாக, சுபாஷ் சந்திரரும் இதர சுயராஜ்யக் கட்சித் தலைவர்களும், கைது செய்யப்பெற்று விசாரணையும், காலவரையறையுமின்றி சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

வியன்னாவில் ராஷ்ட்ரபதி

5. மாந்தலே சிறைக் கோட்டம்

மாந்தலே பர்மாவின் புராதனத் தலைநகர். உலகம் போற்றும் பாரத புத்திரர்களிற் பலரது சிறை வாழ்க்கையால் உயர்வு பெற்ற புண்ணிய நகர். அலையிடைப்பிறவா அமிழ்தென இந்தியாவில் தோன்றிய மகாராஷ்டிர மன்னன்—ஆம், இந்தியாவுக்கே முடிசூடா மன்னராய் விளங்கிய லோகமான்ய பாலகங்காதர திலகர், தம் நாட்டின் மீது அன்பு செலுத்திய குற்றத்திற்காகத் தவங்கிடந்த சிறைச்சாலை இங்கேயே உளது. இங்குதான் திலகர் பெருமான், தமது 'கீதா ரகஸ்யம்' எனும் அற்புத ஆராய்ச்சி நூலை எழுதி முடித்தார். லோகமான்யர் ஆராய்ச்சிக்குரிய புத்தகங்களின் துணை ஏதுமின்றித் தமது அதி தீவிர ஞாபக சக்தியின் உதவியினாலேயே இந்நூலை அச்சிறையில் எழுதி முடித்தார். ஆதலினால், மாந்தலேச் சிறையை பாரத மக்கள் ஒருபோதும் மறவார். ஆனால், நினைத்த மாத்திரத்திலேயே மனந்தடுமாறும் மாந்தலே அன்னவர் வாழ்வதற்கு உரிய இடமன்று. அஃது ஓர் உஷ்ணப் பிரதேசம். உடல் நலத்தைக் கெடுத்துவிடும் தன்மையது.

அங்குள்ள மக்களுக்கும் இந்தியருக்கும், நாகரிகம் பேசும் மொழி ஆகியவற்றால் மிகுந்த வேறுபாடுண்டு. வங்காள அவசரச் சட்டத்தின்கீழ் 1924 அக்டோபர் 25-ம் நாள் சுபாஷ் சந்திரர் கைதியானார். அலிபூர் மத்திய சிறைச்சாலையிலும், பெர்ஹாம்பூர் சிறையிலும் சில மாதங்களைக் கழித்தார். பின்னர் அங்கிருந்து மாந்தலே சிறைக்கு மாற்றப்பட்டார். இச்சிறை வாழ்க்கை சுபாஷின் உடல் நலத்தைக் குலைக்க ஆரம்பித்தது. தன் தேசத்தை நேசிப்பதும், சுதந்தர தாகங் கொள்வதும் ஒரு குற்றமெனின் எத்தகைய மேதாவியும் சிறை வாழ்க்கைக்கு அஞ்சமாட்டானன்றோ ?

ஆதலின் சுபாஷும் சிறைக்குள் நலியலுற்றார். நாளுக்குநாள் அவரது சரீரம் மெலிந்துகொண்டே சென்றது. தமது சரீர நிறையில் 40 பவுண்டு குறைந்துவிட்டது. இந்திய சிறைச் சாலைகளின் சூழல்கள் உலகப்பிரசித்தம். நோய்க்கும், கொடுமைக்கும் அவை உறைவிடங்கள். பழிவாங்கும் துர்க்குணத்துடன் நடாத்தப் பெறும் சிறைகளில் மனிதாபிமானமும் சீவகாருணியமும் எதிர்பார்த்தல் எவ்வாறு பொருந்தும்? ஆகவே, நம் வங்க சுதந்திரச் சந்திரனாய் உதித்த அண்ணலின் மேனியிலும் நோய்க்கறை பற்றிக்கொண்டது. அந்தோ? அவரது இளைத்த யாக்கையில் காச நோய் குடிபுகுந்துவிட்டது. காச நோய் எனின் காலனும் அஞ்சுவான் அல்லவா? எத்தகைய திண்ணிய சரீரத்தையும் மண்ணாக்கிவிடும் மகா கொடிய நோய் அன்றோ அஃது! எனவே ஆண்மை துலங்கும் சரீரக்கட்டும், அஞ்சாநெஞ்சமும் படைத்த சுபாஷ் சந்திரர் 1927 ஏப்ரலில் பாயும் படுக்கையுமானார். தானாகவே எழுந்திருந்து அசைவதற்கும், பேசுவதற்கும் இயலாத நிலைமைக்கு வந்த பிறகே, சர்க்காரின் கடைக்கண் பார்வை நம் தலைவருக்குக் கிடைக்கலாயிற்று. சர்க்கார் அவரை மாந்தலே சிறையிலிருந்து ரங்கூனுக்குச் சமீபத்திலிருக்கும் இன்ஸீன் சிறைக்கு மாற்றினார்கள்.

சுபாஷ் சந்திரரின் சகோதரரான சுநீல சந்திர போஸ் கல்கத்தாவில் ஓர் பிரபல டாக்டர். அன்னவர் அவரது வியாதியைப் பரிசீலனை செய்தார்: சுபாஸ் சந்திரரின் உடல் நிலை அபாயத்திலிருப்பதாக அவர் கண்டார். அரசாங்கத்தின் உள்நாட்டு மந்திரி கனம் மோபர்லி, சுபாஷ் சந்திரரை சுவிட்ஜர்லாந்துக்கு அனுப்புவது நல்லதென உபதேசித்தார். ஆனால் அரசாங்கம் சுபாஷை ஐரோப்பாவுக்கு அனுப்பவேண்டுமாகில் கல்கத்தாவிலாவது இதர துறைமுகங்களிலாவது அவர் காலடி வைக்காமலே நேராகச் செல்லவேண்டும் என்று விதித்

திருந்தது. நம் சுபாஷ் சந்திரர் தம் சுயமரியாதைக்கு இழிவு தரும் சர்க்காரின் நிபந்தனைக்கு உட்பட விரும்பவில்லை. அவர் அதற்குரிய காரணங்களைக்காட்டி தமது மூத்த சகோதரருக்கு ஓர் நிருபம் வரைந்தனுப்பினர். அந்நிருபம் சுபாஷின் ஆண்மையும் சுதந்திர ஆர்வமும் மலர்ந்த அவரது அக அழகைக் காண்பிக்கும் ஓர் பளிங்குபோல் விளங்குகின்றது. ஆதலால் அதன் சாரத்தை ஈண்டு வரைதல் மிகையாகாது.

இன்ஸீன் சென்டிரல் ஜெயில்,
4, ஏப்ரல், 1927.

அன்புமிக்க சகோதர,

தங்களைத் தரிசிக்கும் பேற்றை ஆண்டவன் எனக்கு அருளுவான் என்பது என்ன உறுதி! ஒருக்கால் எனது வாழ்க்கைக் கதிரவன் இங்கேயே மறைந்து போவானோ என்னவோ? யான் எனது வாழ்க்கைச் சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தை இங்கே எழுதிக் கொண்டிருக்கிறேன் என்று நீங்களும் என் அருளுடைய தாயாரும், அன்புடைய தந்தையும், எனதருமைச் சகோதரர்களும் அரிய நண்பர்களும் நினைக்கும்போது பெருமூச் செறிவீர்கள். இத்துணை இளமைப் பருவத்தில், நான் என் கடமையை நிறை வேற்று முன்னர்—எதற்காக நான் இவ்வுலகில் தோற்றுவிக்கப் பெற்றேனோ அதனைச் செய்து முடிக்கு முன்னர் ஆண்டவன் என்னை அழைத்துக் கொள்ளமாட்டார். ஆதலால் நிபந்தனைகளுடன் கூடிய விடுதலை என்பதற்குச் சிறைமாற்றம் என்பதைத் தவிர பிறிதொரு பொருள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எனவே, கனம் மோபர்லியின் அறிக்கை எத்தகைய நோக்கத்துடன் எழுதப்பட்டிருந்த போதிலும் எனக்கு அஃது எவ்வித ஆறுதலும் அளிக்கக் கூடியதாயில்லை. ஆயின் எந்த சட்ட சபையில் நான் அங்கம் பெற்

றிருக்கிறேனே அந்தச் சட்ட சபையின் உள்நாட்டு மந்திரி என்ற நிலைமையில் அவர் எனக்களித்த கௌரவத்திற்கும் நன்மதிப்பிற்கும் நான் அவருக்கு அதிக கடமைப் பட்டிருக்கிறேன். எனது சின்ன அண்ணா செய்திருக்கும் சிபார்சை நான் சிறிதும் விரும்பவில்லை. தங்களுக்கும் அது அப்படியே தானிருக்கும். ஏனெனில் தாங்களும் யானும் ஒரே படகில் அமர்ந்து கொண்டுதான் தேசியமெனும் கடலில் யாத்திரை செய்கின்றோம். சிறிய சகோதரர் என்னைக் கலந்தாலோசியாமலே தமது அறிக்கையையும் சிபார்சையும் செய்திருக்கிறார்.

நான் ஓர் நோயாளியாகவும் அவர் எனக்கு சிகிச்சை செய்யும் வைத்தியராகவும், வைத்திய அதிகாரியாகவும் கருதுவதாயின் அவர் ஒருக்கால் தமது கடமையை நிறைவேற்றிக் கொண்டவராகலாம். ஆனால், அரசியல் சார்பாக அவர் எனக்கு எவ்வித நன்மையுஞ் செய்து விடவில்லை. அரசாங்கம் அவரது சிபார்சை அங்கீகரிக்கவில்லை. எனது நிலைமை அபாயகரமாயில்லை என்று ஹோம் மெம்பர் கனம் மோபர்லி கூறுகிறார். எந்த வைத்திய நிபுணராலும் எத்தகைய மருந்தினாலும் சீர்திருத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டால் மட்டிலுமே என் நிலைமையை அபாயகரமானதென்று சொல்லலாமென்பது அரசாங்கத்தின் கருத்து போலும்!

என் விஷயத்தில் கனம் மோபர்லி இரண்டு நிபந்தனைகளை விதித்திருக்கிறார். அதன்படி நான் சிறைச்சாலையிலேயே சாகவேண்டும். இல்லையெனில் காலவரையறையின்றி அயல் நாட்டில் வைத்தியச் சிகிச்சை பெற்றுக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளையுந் தவிர வேறு வழிகளொன்று மில்லையா? இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அதைச் செய்வதற்குச் சர்க்கார் விரும்பவில்லை.

வங்காளக் குற்றத் திருத்தச் சட்டத்தின் ஆயுள் 1930 ஜனவரியுடன் முடிவடைகின்றது என்பது உண்மை. ஆனால் அத்துடன் அச்சட்டம் மாண்டுபோகுமென்பதற்கு ஆதாரமெதுவுமில்லை. மேலும் அச்சட்டத்தை உயிர்ப்பித்து நீடிக்கச் செய்ய வேண்டுமென்பதைச் சர்க்கார் தானகவே அறியும். ஆகவே நான் இப்பொழுது ஸ்விட்ஜர்லாந்துக்குச் செல்ல இசைந்து கொள்வது நானகவே என்னை நாடு கடத்திக் கொள்வதாகும். இல்லையெனில் சர்க்கார் நான் ஐரோப்பாவில் எவ்வளவு காலம் தங்க வேண்டுமென்று சொல்லுமா?

நான் ஸ்விட்ஜர்லாந்து செல்ல இசைந்து கொண்டதாக வைத்துக் கொள்வோம். அங்கே என்னைத் தொந்தரவு செய்யக் காத்திருக்கும் வேவுகாரர்களின் கூட்டத்திலிருந்து என்னைப் பாதுகாக்கும் பொறுப்பை இச்சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமா? நான் ஒரு அரசியல் 'கேடி' என்பதை ஒப்புக்கொள்கிறேன். அரசியல் கேடித்தனஞ் செய்தலே என் வேலை. அதை நான் என்றும் கையாடிக் கொண்டுதானிருப்பேன். நான் எனது அரசியல் பதவியினின்று நிலை பிறழ்ந்து அரசியல் வாதிகளை போலீஸ்காரர்களுக்குக் காட்டிக்கொடுக்கும் பணியில் ஈடுபடாத வரையிலும் சர்க்காருக்கு என்னால் இடைஞ்சல் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும். ஸ்விட்ஜர்லாந்தில் வேவுகாரர்கள் என் நிழல்போல் என்னைத்தொடர்ந்து திரிவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் ஸ்விட்ஜர்லாந்தில் சுவிஸ்காரர், இத்தாலியர், பிரஞ்சுக்காரர், ஜெர்மானியர், இந்தியர் ஆகிய எல்லா தேசத்தினரையும் இவ்வுளவுத் தொழிலில் நியமித்திருக்கிறார்கள் என்பது கேள்வி. ஆகவே அவர்கள் என்னைப்பற்றி மிகைபடக் கூறிச் சர்க்காரின் உள்ளத்தில் என்னைப் பற்றியதோர் பயங்கர சித்திரத்தை பொறித்துவிட மாட்டார்கள் என்பது என்ன உறுதி? உதாரணமாக இதோ சிந்தித்துப் பாருங்கள்! அகில இந்தியத்

தலைவரும்—கீர்த்திபெற்ற தேசிய வாதியும், உலகம் போற்றும் உத்தமருமான லாலா லஜபதிராய், பார்லிமெண்டு அங்கத்தினராயிருந்த சில நண்பர்களின் உதவியும், மாஜி மந்திரிகளின் சிபார்சும் இல்லாவிடில் தம் தாய் நாட்டு மண்ணின்மீது மீண்டும் அடியெடுத்து வைத்திருப்பாரா?

நான் எவ்வளவுதான் அஞ்சி ஒடுங்கி வாழ்ந்து வந்தாலும், இந்திய சர்க்காருக்கு இவ் வேவுகாரர்கள் என்னைப்பற்றி தவறுதலாகவே அறிமுகஞ் செய்வார்கள். 1929-ம் ஆண்டு பிறக்கு முன்னரே என்னை அந்த அசாதாரண மனிதர்கள் போல் ஷவிக் (பொது வுடைமை) பூச்சாண்டியாகப் படம் பிடித்துக்காட்டிவிடுவார்கள். தற்போது ஐரோப்பாவின் வல்லரசுகள் 'போல்ஷவிசம்' என்ற பதத்தைக் கேட்டவுடனேயே நடுங்கிப் போய்விடுவார்கள். எனவே என் கதி யாதாகுமென்பது நீங்களே அறிவீர்கள். அவர்களது சூழ்ச்சி பலித்தால் நான் ஐரோப்பாவிலேயே வாழ நேரிடும்; அல்லது என் தாய்நாட்டில் அடிவைத்ததும் கைது செய்யப்பட வேண்டும். இவற்றை எல்லாம் நினைக்கும்போது நானுகவே ஏன் என்னை தேசப்பிரஷ்டம் செய்துகொள்ள வேண்டும் என்று கருத இடமேற்படுகின்றதல்லவா? ஆதலால் இவ் வரசாங்கமே என் நிலைமையைப் பரிசீலனை செய்து ஓர் முடிவுக்கு வரவேண்டுமென்பது என் கருத்து.

பொது உடைமை ஏஜெண்டாக வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தினையளவேனும் என் இதயத்தில் இருந்திருக்குமாயின் நான் என்றைக்கோ அவ்வாறு ஆகியிருக்கக் கூடும். அதற்குரிய வசதிகளும் பொருளுதவியும் எனக்கு அளிக்கப்பட்டதுண்டு. அவைகளைப் பெற்றுக்கொண்டு ஐரோப்பா செல்லும் முதற் கப்பலிலேயே யாத்திரை செய்து தீக்கனல்போன்ற பேச்சுகளையும், இடி முழக்கம்போன்ற சொன்மாரியையும் பொழிந்து கொண்டே பாரிஸிலிருந்து

லெனின்கிரேடு வரையிலும் ஆர்ப்பரித்துத் திரிகின்ற இரத்தக் கொதிப்புற்ற வாலிபர்கள் குழாத்துடன் என்றைக்கோ நான் சேர்ந்திருக்க முடியும். ஆனால் அத்தகைய எண்ணமும் ஆசையும் எனக்கு இல்லை.

எனது தாய்த் திருநாட்டிலும், சகோதர தேசங்களாகிய பர்மாவிலும், இலங்கையிலுங்கூட நான் என் அடியெடுத்து வைக்கலாகாது என்ற வார்த்தைகளைக் கண்ணுற்றேன். என் கண்களையே என்னால் நம்ப முடியவில்லை யாதலால் என் கண்களைத் துடைத்துக்கொண்டே பன்முறை படித்துப் பார்த்தேன். அச்சமயத்தில் என் உள்ளக் கடலில் எழுந்த சிந்தனை அலைகள் ஒன்றன்மீதொன்றாக மோதி என்னைக்கலக்கியதைப்பற்றி யான் உங்களிடம் எவ்வாறு வருணிப்பேன். நான் வாழ்ந்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் நிலைத்திருக்காதா என்ன, நான் அத்துணை பயங்கரமானவனா? ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. தேசத்தின்பொருட்டு யான் செய்துள்ள தொண்டின் நிலைமையைப் பார்ப்பதாயின் எனது அரசியற் கொள்கைகள் அக்கினிக் குழம்பைக் கக்கும் எரிமலையைப்போல அத்துணை அபாயம் செறிந்ததல்ல. வங்கத்திற்கு வெளியேயுள்ள இடங்கட்கு என் தேசப் பணியின் பிரபாவம் எட்டவில்லை. ஏனெனில் வங்கமே எனக்குப் போதுமானது. அவ்விடத்திலேயே செய்ய வேண்டிய வேலைகள் போதுமானபடி யிருக்கின்றன. என் ஆசையும், அன்பும், அகில உலகமும் வங்கமேதான். இது வரையிலும் யான் வங்கத்திற்கு வெளியே பிரசார நிமித்தம் போனதே யில்லை. அப்படியிருக்க பர்மா இலங்கை முதலிய அரசாங்கத்தவர்களும் என்னைக் கண்டு பீதி யடைவானேன்? இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய சர்க்காருக்கும் ஏதேனும் தொடர்பு உண்டோ? இல்லை எனின் எனக்கேன் இலங்கையிலும் இறங்கலாகாதென்ற நிபந்தனை விதிக்கப் படுகிறது?

இரண்டரை வருடங்கள்? எவ்வளவு நீண்ட காலம்? எத்துணை துன்பம்! எனது பெற்றோரையும் சுற்றத்தாரையும் அருமை நண்பர்களையும் பிரிந்து நான் நரக வேதனை யடைந்தது இச்சர்க்காருக்குத் தெரியாமலா போய்விடும்? ஆடு நனைகிறதே என்ற கவலை ஓநாய்க்கு இருக்க முடியுமா? இன்னும் இரண்டரை, மூன்று வருடங்கட்கு என்னை நாடுகடத்திக் கொள்வதை எவ்வாறு பொறுத்துக் கொண்டிருப்பது? தர்ம கைங்கரியப் பட்டத்தை சர்க்காரே கட்டிக் கொள்ள விட்டு விடுகிறேன். ஏனெனின் புகழின் வழியானது எப்பொழுதும் சமாதியிலேயே தான் போய் முடிகின்றது!

நான் விடுதலை பெற்று வருதற்குரிய சந்தர்ப்பம், அரிதாகவும், காலம் நீண்டதாகவும் இருத்தலால் வருந்த வேண்டாம். எனதாசைத் தாயாரையும் அன்புமிக்க தந்தையாரையும் தேற்றுவீராக. நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தும், தனித் தனியாகவும் துன்பப்படக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனின் சுதந்திரம் தேசத்தின் பொக்கிஷம். அது விலை மதிக்கப் பெறாதது. நமது உயிரைப் பணயம் வைத்தாகிலும் நாம் அதைப் பெற்றே தீரவேண்டும். ஆண்டவன் எனக்களிக்கும் எல்லா இடுக்கண்களையும் நான் பொறுமையுடன் அனுபவிக்கச் சித்தமாகவே யிருக்கிறேன். பாரத சமுதாயம் செய்த பெரிய பாவத்தின் பயனாக நானும் என்னளவிற் பெரிய தவம் புரிந்து வருகின்றேன். நம் எண்ணம் எக்காலத்திலும் இறவாது. தேசம் நம்மை ஒரு போதும் மறந்துவிடாது. இதுவே எனது இன்பக் கனவு; சுதந்திரக் கனவும் அதுவேயாகும்!

6. சிறைமீட்சி

1927 மே பதினைந்தாம் நாள் நடுப்பகல். கல்கத்தாவி லுள்ள அவுட்ரம கட்டத்தில் தாங்க ஒண்ணு மக்கட் கூட்டம். ஜனங்களின் கண்கள் பர்மாவினின்று வந்திருக்கும் அரோண்டா எனும் கப்பலையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கின்றன. மக்கள் வங்க தேசப் பொக்கிஷ மாகிய சுபாஷ் சந்திரனைத் தரிசிக்கும் பேறு தமக்குக் கிட்டுமோ வென்ற சந்தேகத்தாற் கலங்கி நின்று கொண் டிருந்தனர். ஐரோப்பாவுக்கு நாடு கடத்தப்படும் சுபாஷ் சந்திரர் சர்க்கார் அனுமதிப்பினும் அல்லாவிடினும் கண்டிப் பாய் கல்கத்தாவில் இறங்கப்போவதாய் பர்மாவினின்று புறப் படும்போதே ஓர் அறிக்கை விடுத்திருந்தார். பகல் 11 மணிக்கு கப்பல் நடு ஆற்றில் வந்து நின்றது. கவர்னரின் நீராவிப் படகாகிய மேரிராணு, அரோண்டாவைச் சேர்ந்தது. அதிலிருந்து சுபாஷ் சந்திரரின் சகோதரரான சரத் சந்திர போஸ் கப்பலுக்குள் ஏறிஞர். சற்று நேரத்துக்குள் சுபாஷ் சாய்வு நாற்காலியில் கிடத்தப்பெற்று நீராவிப் படகுக்குக் கொண்டு வரப்பட்டார். கவர்னரின் சொந்த வைத்தியரான மேஜர் ஹிங்ஸ்டன், லெப்டினண்டு கர்னல் சாண்டிஸ், ஸர் நீலரத்ன சர்க்கார், டாக்டர் பி. ஸி. ராய் இந்நால்வரும் சுபாஷ் சந்திரரை சோதித்தனர். அவர் தம்மை முன்னால் பார்த் திருப்பவர்க்கும் அடையாளந் தெரியாவண்ணம் உருக்குலைந்து படுக்கையிற் படுத்துக்கொண்டிருந்தார். வைத்தியர்கள் நால் வரும் தலைவர் கொடிய நோய் வாய்ப்பட்டிருப்பதாகவே தெரி வித்தனர். புறவுடல் நலிந்து தேய்வுற்றுக் கிடந்தாலும், முகத்தில் அகவொளியும், வீரப்பார்வையும் குன்றவில்லை.

மாலையில் நாலுமணிச் சமயத்தில் சரத் சந்திரரும் இதர டாக்டர்களும் மேரிராணுவை விட்டு வெளியேறினர். மேஜர்

ஹிங்ஸ்டன் மட்டிலும் அன்றிரவை சுபாஷுடன் கழித்தார். பாபுவை விடுவிக்கத் தம்மாலானது வரையிலும் அவர் முயன்று கொண்டிருந்தார். கவர்னர் மாளிகையும் அன்று இரவில் பெரும் பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. வங்க மக்களின் உள்ளக் கொந்தளிப்பையும், பாபுவின் தேக நிலைமையையுங் கண்ட சர்க்கார் அவரை விடுதலை செய்வதென முடிவு கட்டி மறுநாட் காலையில் சரத்சந்திரருக்கு சுபாஷை விடுவிக்க உத்தரவு தந்திருப்பதாகத் தந்தி கொடுத்தனர். சர்க்கார் விடுத்த அறிக்கையில் சுபாஷ்சந்திரர் தமது விருப்பம்போல் எந்த இடத்திலும் எவ்விதத்தடையுமின்றிச் சிகிச்சை செய்துகொள்ளலாமென அனுமதிக்கப்பட்டிருந்தது.

சுபாஷ்சந்திரர் விடுதலை செய்யப்பெற்ற செய்தியை கேட்ட பாரத மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். நாடெங்கணும் வாழ்த்துக் கூட்டங்கள் நடைபெற்றன. வங்காளம் மட்டிலும் வரம்பிலா மகிழ்ச்சிப் பெருக்கால் குதூகலித்தது. சுபாஷின் படுக்கையருகில் வாழ்த்துக் கடிதங்கள் குன்றுபோல் வந்து குவிந்தன. தம்மை வாழ்த்தின மக்கட்கு சுபாஷ் சந்திரர் கீழ் வருமாறு பத்திரிகைகள் வாயிலாகத் தமது நன்றியறிதலான வணக்கத்தை தெரிவித்தார்.

"சிறை மீண்டு வீடு வந்து சேர்ந்தேன். தேசத்திற்குச் செய்ய வேண்டிய கடமை அளவிறந்து கிடக்கின்றதென யான் அறிவேன். ஆயினும்என் செய்வது? சுவரை வைத்துக்கொண்டு தானே சித்திரம் எழுதவேண்டும். சரீரம் படுத்துவிட்டது. ஒன்றுக்கு முதவாத் துரும்புபோல் நொறுங்கிக்கிடக்கிறேன். ஆதலால் முதலில் என் உடம்பைச் சீர்திருத்திக் கொள்வதற்கு எனக்கு அவகாசமளிப்பீராக உடல் தேறியதும் யானே உழைக்க முந்திவிடுவேன். நெஞ்சில் உரமும், உணர்ச்சியுள் வீரமும், தொண்டில் தாளாண்மையும் பொருந்தியிருக்க, உடலில் வலிமை இல்லை எனில் என்னால் என்ன செய்ய முடியும்?"

பல மாதங்கட்குப் பிறகு பாபுவின் உடல் தேறியது. தாம் வாக்குறுதி தந்தது போலவே அரசியலில் உடனே ஈடுபட்டு விட்டார். வங்காளக் மாகாணக் கமிட்டித் தலைவரானார். சட்டசபைக் கூட்டங்களில் அவர் பொழிந்த பேச்சுகளும், கமிட்டிச் சார்பில் புரிந்த செயல்களும், இந்தியா வெங்கணும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.

7. சுபாஷின் லட்சியம்

கல்கத்தாவிற் கூடிய 43-வது காங்கிரஸ் மகாசபையின் போது [1928 டிசம்பர்] பாரதத்தின் கண்ணைக்கவர்ந்த மாபெருந்தலைவர்களில் சுபாஷ் சந்திரரும் ஒருவர். இவர் சேனாதிபதியின் உடையணிந்து இந்தியக் காங்கிரஸ் மகா சபைக்குத் தலைவரான மோதிலால் நேருவை வரவேற்ற வைபவம் காங்கிரஸ் சரித்திரத்தில் புகழ்தற்குரியதோர் காட்சியாகும். இம்மகா சபையில், குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்ட நேரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. ஆயினும், "1929 டிசம்பர் 31-ம் தேதிக்குள் அரசாங்கம் அத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிடில் உடனே ஒத்துழையாமையைக் கையாட வேண்டும். இதனிடையே பூரண சுயாட்சிக் குரிய இயக்கமும் நடைபெற்றுக் கொண்டே யிருக்கும்," என்று சபையில் ஓர் தீர்மானம் கொண்டுவரப் பட்டது. ஆனால், வாலிபர்கட்கு இத்தீர்மானம் ஆறுதலளிக்கவில்லை. யௌவன இந்தியாவின் திலகம்போல் திகழ்ந்துகொண்டிருந்த சுபாஷ் சந்திரர் அது சமயம், "கலப்பற்ற பரிபூரண சுயராஜ்யமே வேண்டும். பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இனியும் சமரசம் பேசுவதா?" என்று ஓர் திருத்தம் கொண்டுவந்தார். மகாசபைத் தலைவரான நேருவின் புத்திரராகிய ஜவஹர்லால் நேரு அதை ஆதரித்தார். 973 பேர் சாதகமாகவும் 1350 பாதகமாகவும் வாக்களித்தனர். திருத்தம் தோல்வியுற்றது. என்றாலும் பரிபூரண சுயராஜ்யக் கொள்கை தலைகாட்டிவிடும் என்றே தலைவர்கள் அனைவரும் நம்பினார்கள். அடுத்த வருடத்திற்குள் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெறாவிடில் தாம் பூர்ண சுயராஜ்ய இயக்கத்தைத் தழுவிக்கொள்வது நிச்சயமென்று மகாத்மாவும் உறுதிமொழி கூறினார். பூரண சுயராஜ்யத்திற்குக் குறைந்த

எத்தகைய லட்சியத்தையும் ஏற்றுக்கொள்வது இழிவு என்ற கருத்தை சுபாஷ் சந்திரர் மக்கட்கு எடுத்துக் கூறிவரலானார்.

சித்தரஞ்சனரால் ஆரம்பிக்கப்பட்டு சுபாஷ் சந்திரரால் நடத்தப்பட்டுவந்த 'பார்வேர்டு' பத்திரிகை இவ்வழியிற் சிறந்த ஊழியஞ் செய்துகொண்டிருந்தது. ஆனால் நாகபுரி ரயில்வேக் கம்பெனியார் 'பார்வெர்'டின்மீது மான நஷ்ட வழக்கொன்று தொடுத்தார்கள். 1929 ஏப்ரில் 24உ பத்திரிகைக்கு விரோதமாய்த் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ரயில்வேக் கம்பெனிக்கு 'பார்வெர்டு' பத்திரிகை ஒன்றரை லட்ச ரூபாய் நஷ்டஈடாகக் கொடுக்கவேண்டியதாயிற்று. அப்பத்திரிகையை நிர்வகித்து வந்தவர் சுபாஷ் சந்திரர். உடனேயே அவர் இரவோடிரவாய் 'பார்வெர்டு' பத்திரிகையின் பேரால் சில உடைந்த அச்சுக்களையும் யந்திரங்களையும் வைத்துவிட்டு, குஞ்ச் பிஹாரி சர்க்கார் என்பவரை பதிப்பாளராகக் கொண்டு 'புதிய பார்வேர்டு' என்று பிறிதொரு பத்திரிகையை ஆரம்பித்தார். அதனையும் ரயில்வேக் கம்பெனியார் அரசாங்க உதவியுடன் தடுத்துவிட்டனர். மூன்றும் நாள் 'லிபர்டி' எனும் பெயரால் ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். அதனை அதிகாரிகளால் ஒன்றுஞ் செய்ய இயலாமற் போய்விட்டது. ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு மூன்று தினங்கட்குள் மூன்று பத்திரிகைகளைத் தோற்றுவித்தல் எளிய காரியமன்று. இந்நிகழ்ச்சி சுபாஷ் சந்திரரது செல்வாக்கிற்கும் காரிய நிர்வாகத் திறமைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். சுபாஷ் ஓர் வாய்ச்சொல் வீரர் அல்ல; அவர் உண்மையான ஒரு கர்ம வீரரே என்பதற்கும் இஃது ஓர் தக்க சான்றாகமன்றோ!

1929 ஜூன் 12-ம் நாள், 'லிபர்ட்டி' தோன்றிய இரண்டாவது மாதத்தில் அஸ்ஸாமில் வெள்ளப் பிரவாகம் ஏற்பட்டு தலைவரின் சிரத்தை சோதிக்கப்பட்டது. பன்னிரண்டு லட்சம் மக்கள் இதனாற் பாதிக்கப் பட்டிருந்தனர்.

இதை யுணர்ந்த பாபு நிவாரண வேலைகளில் ஈடுப்பட்டு இரவு பகலாய் ஊணுறக்கமின்றி உழைத்து வந்தார். மக்களின் துயரும் ஒருவாறு தணிந்தது.

என்னவாயினும் பொது நலத் தொண்டர்க்கு ஓய்வு ஏது, ஆறுதல் எங்கே? கல்கத்தா ஆலைத்தொழிலாளர்க்கும் முதலாளிகட்கும் சச்சரவு விளைந்தது. தொழிலாளர்கள் கட்டுப் பாட்டுடன் வேலை நிறுத்தஞ் செய்தனர். ஏழு தினங்கள் வரையிலும் நகர எல்லைக்குள் கூட்டங்கள் கூட்டுவித்தலாகா தென்று 1929 ஆகஸ்ட் 11-ம் தேதி போலீஸ் தடை யுத்தரவு ஒன்று பிறப்பிக்கப் பட்டது. அத்தினத்திலேயே வங்காளத் தில் 'தியாகிகள் தினம்' கொண்டாடுதற்கு மக்கள் தீர்மானித் திருந்தனர். எனவே 'ஹஜாரிபாக்' எனும் இடத்தில் சுபாஷ் சந்திரர் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடை பெற்றது. கல்கத்தா நகர மண்டபத்தில் காலஞ் சென்ற சென்குப்தாவின் தலைமையில் பிறிதோர் கூட்டம் நிகழ்ந்தது. அக்கூட்டங்களில் லாகூர் முதலான சிறைச்சாலைகளில் அடை பட்டு அல்லலுறும் அரசியற் கைதிகள் நடத்தப்படும் முறை களைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் ஓர் பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றது. சுபாஷ் சந்திரரே அதை நடாத்திச் சென்றார். வழியெங் கணும் 'புரட்சி நீடூழி வாழ்க! ஏகாதிபத்யம் வீழ்க!' என்ற ஓசை வானைப் பிளந்தது. இக்காட்சி போலீஸாரின் கண் களை உறுத்திற்று. சுபாஷின் செல்வாக்கையும் ஜன சக்தி யின் வேகத்தையுங் கண்டு பொறாமையுற்ற அதிகாரிகள் அவர் மீது பல்வித வழக்குகளைத் தொடரலாயினர்.

1929-ம் வருடம் டிசம்பர் 29-ம் தேதி லாகூரில் 44-வது காங்கிரஸ் மகாசபை கூடியது. பண்டித ஜவஹர்லால் தலைமை வகித்தார். மகாத்மா காந்தியும் பண்டித மோதிலால் நேருவும் விஜயஞ் செய்திருந்தனர். பரிபூரண சுயேச்சைத்

தீர்மானம் இம்மகா நாட்டிலேயே மகாத்மாவால் பிரரேபிக்கப்பட்டு நிறைவேறியது. அது பற்றிச் சுபாஷ் சந்திரர் பேசுங்கால் மொழிந்ததாவது :—

"குரு கோவிந்த சிம்மனால் உயிர்ப்பிக்கப் பெற்ற சாதி—சீக்கிய சாதி! பாஞ்சாலத்தை உறைவிடமாகக் கொண்ட இவ்வீர மரபிலேயே ரஞ்சித சிம்மன் தோன்றி செங்கோலோச்சினான். இங்குதான் அகில இந்தியப் பிரதிநிதிகள் இன்று பூரண சுயேட்சைத் தீர்மானத்தை இக்காங்கிரஸ் மேடையின்மீது நிறைவேற்றி வைக்கின்றனர். பண்டைக் காலத்தில் இங்குதான் பாண்டவர் குல விளக்காகிய பஞ்சாலி துரியோதனாதியரை யழிக்கும் நோக்குடன் பாரதப் போர் தொடுக்கச் சபதஞ் செய்தனள். இத்தகைய திருப்பதியிலேயே நாம் நமது பூரண சுதந்திர லட்சியத்தைப் பெறுவதெனச் சிந்து முதலாகிய ஐந்து நதிகளையும் சாட்சியாகவைத்துச் சபதங் கூறியுள்ளோம். சென்ற வருஷம் இவ்விரதத்தை மேற்கொள்ள வாலிபர் உள்ளம் துடிதுடித்தது. மகாத்மா காந்தியும், பண்டித மோதிலால் நேருவும் எங்கள் தீர்மானத்தை எதிர்க்கவே சுயேச்சைத் தீர்மானம் அது போது தோல்வியுற்றது. "தோற்றேன் என்ற போது வெற்றி கொண்டாய் நீ" என்று பகவான் கீதையில் அருளிய மொழி எங்கள் விஷயத்தில் இவ்வருடம் நிரூபித்துக் காட்டப்பெற்றது. பூரண சுயேச்சைத் தீர்மானம் இவ்வாண்டில் நிறைவேறியதால் சென்ற ஆண்டில் நாங்கள் கொண்டிருந்த மனப்பான்மை சரிதான் என்பது தெளிவாக விளக்கப்பட்டது. தவிர இத்தீர்மானத்தின் சிறப்பு என்னையெனின் அதனை மகாத்மா பிரரேபிக்க பண்டித மோதிலால் நேரு ஆதரித்ததேயாகும்....... தீர்மானத்தை எதிர்த்த மகாத்மாவே இவ்வருடம் அதைப் பிரரேபித்தற்காக என் தாழ்மையான வணக்கத்தை அன்னவருக்குச் செலுத்திக் கொள்கின்றேன்."

8. சிறைக்குள் தேசீயக்கொடி

காங்கிரஸின் லட்சியம் பூரண சுயேச்சை என்று தீர் மானித்த நாள் தொடங்கி நாடெங்கும் சுயேச்சை விழா கொண் டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவின்போது தேசமக்கள் மூவர்ணக் கொடியேற்றி அதனை வணங்குவர். ஊர்வலம் நடாத்துவர். பொதுக் கூட்டங்கள் கூட்டுவித்து அதில் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி வைப்பர். அக்கூட்டங்களில் ஆடவரும் பெண்டிரும், பெரியோருஞ் சிறியோருமாகிய அனைவரும் ஆயிரக்கணக்கில் கலந்துகொள் வர். இவ்விழா வங்காளத்தில் முதன்முதலாக நடைபெறுதற் குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண் டிருந்தன. அதுகாலை, 1930 ஜனவரி, 28-ம் நாள் அலிப்பூர் உதவி மாஜிஸ்திரேட் பாபுவின்மீது தொடரப் பட்டிருந்த ராஜத் துவேஷ வழக்கில் தீர்ப்பளித்து பாபுவை ஒரு வருடக் கடுங்காவலுக்கு ஆளாக்கி னார். சுபாஷ் சந்திரர் அலிப்பூர் சிறைக்குள் அடைபட்டார். அவர் சிறைபுகுந்த இரண்டாம் நாள் வங்கமெங்கும் பூரண சுயேச்சை விழா கொண்டாடப்பட்டது. சிறைபுகுந்த சுபாஷ் சந்திரரும் அவரது நண்பர்களும் தாய்நாட்டு அன்பிற் குறைந்தவர்களா? ஆண்மையற்ற பேடிகளா? தாயின் மணிக்கொடியை ஏற்றுவித்து வணங்கும் அத் திருநாள் தனக்குப் பயன்படாதொழிய வேண்டுமென்று அதிகாரிகள் செய்த சூழ்ச்சியை நிறைவேற்றிவைக்க இவ்வங்க சிங்கத்தின் மனம் துணியுமா? எனவே பூரண சுயேச்சை விழா சிறைக் கோட்டத்திலும் கொண்டாடப் பட்டது. எப்படியோ பாரதத்தின் மூவர்ணக்கொடி சிறைக்களம் புகுந்து பறக்க ஆரம்பித்துவிட்டது. பார்த்தார்கள் சிறை யதிகாரிகள். தமக்குப் பேரவமானம் விளைந்துவிட்டதாகக் கருதினார் கள். உடனே விசாரணை செய்தனர். அனைவரும் ஒன்று

போல் உண்மை கூற மறுத்துவிட்டனர். சுபாஷ் சந்திர ரையே அதிகாரிகள் சந்தேகித்தனர். 'என்ன செய்தாலும் நாங்கள் இரகசியத்தை வெளியிடோம்' என்று சுபாஷ் சந்திரர் கூறி விட்டார். இதனால் மனக் கசப்படைந்த அதிகாரிகள் சுபாஷின்மீது பழி தீர்க்கும் சந்தர்ப்பத்தையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஓர் நாள் இச்சிறை நிர்வாகிகட்கும் அரசியல் கைதிகட்கு மிடையே சச்சரவு ஏற்பட்டது. சிறை அதிகாரிகள் இட்ட அவமரியாதையான கட்டளைகட்கு அரசியல் கைதிகள் தலைவணங்க மறுத்துவிட்டதே அதற்குக் காரணம். குழப்பம் ஆரம்பித்ததும் அபாய மணி அடிக்கப்பட்டது. வார்டர்களும் ராணுவ வீரர்களும் பரபரப்புடன் அங்கே வந்து சேர்ந்த னர். கைதிகள் அப்போது மாடியின்மீது இருந்தனர். கீழே இறங்கிவர மறுத்ததால் அவர்களைக் கீழே பிடித்துத் தள்ள வேண்டியதாயிற்று. சுபாஷ் சந்திரர் மிருகத்தனமாய் நடத்தப் பட்டார். மூன்று மணி நேரம் மூர்ச்சை யிழந்து கிடந்தார். கைமணிக்கட்டு பிறழ்ந்துபோயிற்று. உடனே ஜுரங் கண்டது. அதன் பயனாகப் பல மாதங்கள் நோவாய்ப்பட்டு வருந்தினார். யோகி அரவிந்தராலும் சித்தரஞ்சனதாச ராலும் புனிதமாக்கப்பெற்ற இப் புண்ணியச் சிறை தற் போது சுபாஷ் சந்திரருக்கும் உறைவிடமாயிற்று. கொலை ஞர்க்கும் களவியற்றும் கொடியர்க்கும் என அமைந்த சிறைச்சாலை இந்நாளில் கடமை தப்பா நிமலர்க்கு இடமாயின் காலத்தின் கூற்றுதான் என்னே! என்னே!!

9. உப்புப் போர்

1930-ல் மகாத்மா தமது மகத்தான உப்பு சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தார். கடற்கரையை அணுகுவதற்கு வசதியற்ற இடங்களிலெல்லாம் உப்பு உற்பத்தி செய்யும் முறைகளை மக்கள் கையாண்டு வந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தேசீய உணர்ச்சியலைகள் கொந்தளித்து நாட்டு மக்களைப் பிடித்து அசைத்துக் கொண்டிருந்தன. 1930 மார்ச் மாதத்தில் காந்திஜீயின் சரித்திரப் பிரசித்திபெற்ற தண்டி யாத்திரை ஆரம்பமாயிற்று. அகில உலகமும் காந்திப் பெரியாரின் உப்புப் போரின் முடிவை கவனித்துக் கொண்டே யிருந்தது. இப்போராட்டத்தில் துப்பாக்கியின் குண்டுக்கு இரையானவர் பலர். தடியடியால் காயம் பட்டவர் அனேகர். சிறைப் பட்டவர் பல்லாயிரவர். ஆகவே இவ்வற்புத சாத்வீக எதிர்ப்பில் அல்லலுற்றவர் தொகை அரசாங்கத்தையும் நடு நடுங்கச் செய்தது. இப்போராட்டத்தில் மிருக பலத்தைக் கண்டோமெனில் தெய்வீகத் தன்மையும் விளங்காமற் போகவில்லை. அஹிம்ஸா தத்துவம் அனுபவ சாத்தியத்திற்குப் புறம்பான ஓர் கொள்கை யன்று. ஆயின் சுதந்திர தாகத்தால் துடிதுடிக்கும் மனிதனுக்குரிய தோர் போர்க் கவசமேயாகும் அஃது என்பதை அவ்வுப்புப் போர் உலகத்திற்கறிவித்தது. இப்போராட்டத்தின் பயனாய் அரசாங்கப் பிரதிநிதியாகிய லார்ட் இர்வினுக்கும் (அப்போது வைஸ்ராயாக விருந்தவர்) காங்கிரஸின் சார்பில் காந்திஜீக்கும் சமரசப் பேச்சுகள் நடைபெற்றதென்றால் அஃதோர் அற்புதமான சரித்திர நிகழ்ச்சியேயாகும். இது நிற்க.

உப்புப்போர் தீவிரமாய் நடைபெற்றுக் கொண்டிருக்குஞ் சமயத்தில், 1930 டிசம்பரில் சுபாஷ் சந்திரர் விடுதலை

பெற்றார். தமக்குச் சுதந்திரம் கிடைத்த மறுநிமிட முதலே வேலையில் ஈடுபடலானார். 'வங்கத்து மக்கள் அனைவரும் அவரது வருகையால் மின்சார சக்தியைப்போன்றதொரு புத்துயிர் பெற்று எழுந்தனர். அவரது அனல்பொறிக்கும் பேச்சுகள் மக்கள் உள்ளத்துள் எல்லாம் வீராவேசத்தை மூட்டின. தேசிய வேகத்தைத் தணிக்கும் நோக்குடன் சர்க்கார் உடனே இவர் மீது 114-வது தடை யுத்தரவைப் பிரயோகஞ் செய்தனர். "என்னைக் கண்ட அக்கணமே குழப்பங்கள் விளையுமாகில் என்ன நான் கொள்ளைக்காரனா அல்லது திருடனா? இவ்வுத்தரவிற்குக் கீழ்ப்படிய மாட்டேன்," என்று சொல்லி விட்டார். ஆதலால் உடனேயே பாபுவைக் கைது செய்தனர். விசாரணை நடைபெற்றது. ஏழு நாள் தண்டனை பெற்றார். ராஜசாஹிப் சிறையில் அடைபட்டுக் கிடந்த சுபாஷ் நள்ளிரவில் எழுப்பப்பட்டு அலிபூர் சிறைக்கு மாற்றப்பட்டார். ஒரு வாரத் தண்டனை முடிவுற்றதும் மீண்டும் சிறைப்படுத்தப்பட்டார். நோய் வாய்ப்பட்டுத் தளர்ந்த இவரது சரீரம் இடைவிடாத சிறை வாழ்க்கையால் மேலும் மேலும் நலிவுற்றுக் கொண்டே வந்தது.

கல்கத்தா கார்பொரேஷனின் முக்கிய நிர்வாக உத்தியோகஸ்தராயிருந்த பாபு நாளடைவில் மேயர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இச் சமயத்தில் சுயேச்சை விழா கொண்டாட ஏற்பாடுகள் மும்மரமாய் நடைபெற்றுக்கொண்டிருந்தன. போலீஸ் வீரர்கள் முன்னெச்சரிக்கையுடனே நகரத்தைக் காவல் புரிந்துகொண் டிருந்தனர். 1931 ஜனவரி 25ல் விழாக் கொண்டாடுவதென மக்கள் குதூகலித்துக் கொண்டிருந்தனர். ஆனால் போலீஸார் அன்று கிழக்கு விடிவதற்குள்ளாகவே மக்களை அவரவர் வீட்டிற்குள்ளேயே காவலில் வைத்துவிட்டனர். பின் விளைவை முன்னாலேயே எதிர்பார்த்திருந்த சுபாஷ் அன்று அதிகாலையில் வெகுநேரத்

திற்கு முன்பாகவே தமது காரியாலயத்திற்குச் சென்று விட்டார்.

மாலை மணி நாலு அடித்தது. தனது வேலைகளை முடித்து கையில் பெரியதோர் தேசியக் கொடியைத் தாங்கிக் கொண்டு நகரசபையின் மேயர் வெளியேறினார். அவ்வளவு தான்; எங்கும் மக்கட்கடல் கொந்தளித்துப் பேராரவாரம் செய்ய ஆரம்பித்தது. இதனை சர்க்கார் பொறுமையுடன் எவ்வாறு பார்த்துக்கொண்டிருப்பர்? எனவே குதிரைப் படைகள் ஓர் புறமும், போலீஸ் படைகள் மற்றொரு புறமும், ராணுவ வீரர்கள் பிறிதொரு புறமுமாய்க் கூட்டத்தின்மீது பாய்ந்து மக்களைத் தடியாலடித்துக் கலைத்தனர். அதுபோது சுபாஷ் சந்திரருக்கும் பலத்த காயங்கள் தலையிலும், நெற்றியிலும் கழுத்தின் பின்புறத்திலும் ஏற்பட்டன. இந்நிலைமையில் ஆறுமாதக் கடினகாவலும் விதிக்கப்பட்டார். ஆனால் 1931-ல் உப்புப் போர் முடிந்தது. காந்தி இர்வின் உடன்படிக்கை ஏற்பட்டது. அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பெற்றனர். சுபாஷ் பாபுவும் அச்சமயம் விடுதலை பெற்றார். மகாத்மாவுக்கும் ராஜப் பிரதிநிதிக்கு மிடையே விளைந்த சமரசத்தால் சுபாஷ் சந்திரர் மனம் ஆறுதல் கொள்ள வில்லை. இந்நிலைமையிலேயேதான் சட்டசபையிற் குண்டு வீசிய குற்றத்திற்காக சிங்க மனம் படைத்த பாஞ்சால வீரன் பகவத் சிங்கும் அவரது தோழர்களான ராஜகுரு சுகதேவ் என்பவர்களும் தூக்கிலிடப்பெற்றனர். அப்போது தான் அரசியல் கைதிகளை நடத்தும் முறைகளைப் பரிகரிக்கும் முயற்சியில் யதீந்திரநாதர் 61-நாள் உண்ணாவிரத மிருந்து தம் உயிர் நீத்தார். இந்நிகழ்ச்சிகளைக் கண்டு உள்ளம் பதைத்த பாபு சர்க்காரின் மனம் மாறியதாகக் கருதவேயில்லை. புரட்சி மனப்பான்மை கொண்டு உயிர்விட்ட இளைஞரின் சார்பாகக் காங்கிரஸ் போதிய அளவு போராடவில்லையென்றும், அதனால்

பொதுமக்கட்கிடையே காங்கிரஸின் செல்வாக்குக் குறைந்து விட்டதென்றும், 1931 மார்ச்சு 21-ம் நாள் கராச்சியில் கூடிய நவஜீவன் மகாநாட்டிற் பேசினார்.

10. வட்டமேசை மகாநாடு

லண்டனில் இரண்டாவது வட்ட மேசை மகாநாடு 1931-வது வருடத்தில் கூடிற்று. காந்திஜீ இந்தியாவின் ஒப்பற்ற பிரதிநிதியாகச் சென்றிருந்தார். காங்கிரஸின் கோரிக்கைகளை பிரிட்டிஷ் மந்திரிகட்கு நன்ருய் எடுத்து விளக்கிஞர். அவர் மொழிந்த ஒவ்வொரு பேச்சும் பிரிட்டிஷ் மக்களின் மனதில் ஆழப்பதிந்தது. ஆயினும் என் ? அவை விழலுக்கு இறைத்த நீராயின. உருப்படியான வேலைகள் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் மகாத்மா இந்தியாவுக்குத்திரும்பிஞர்.

இந்தியாவிலோ நிலைமை சீர்கெட்டுக் கிடந்தது. ஒப்பந்தத்தின்படிக் காரியங்கள் ஒன்றும் நிகழவில்லை. பண்டித ஜவஹர்லாலும், ஷெர்வானியும் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர். 1932 ஜனவரி 4-ம் நாள் காந்திஜீயும், வல்லபாய் படேலும் கைதியாயினர். அதற்குப்பின் வீர வித்தல்பாயும், பம்பாய் நரிமனும் சிறைபுகுந்தனர்.

இதுகாலையில் சுபாஷ் சந்திரர் சியோனி சிறைச்சாலையில் ஐந்து மாதங்கள் 'பந்தோபஸ்தி'லிருந்தார். தாங்கவொண்ணு வெப்ப மிகுந்த இவ்வூர் சுபாஷின் உடல் நிலைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. எடையில் இருபத்தெட்டு ராத்தல் குறைந்து போயிற்று. பாவம், அன்னை பணியில் துயர் துய்க்கவே பிறந்தார் போலும்! அடிக்கடி சுரம் அடித்துக் கொண்டிருந்தது. உடல் மெலிந்து, வயிற்றுவலியுங் கண்டது. சுபாஷ் பாபு சியோனியிலிருந்து ஜபல்பூர் சிறைக்கு மாற்றப்பட்டார். நோய் முற்றிக்கொண்டே சென்றது. உடல் நிறையும் குன்றிக் கொண்டே வந்தது. பின்னர் சுபாஷ் பாபு, சென்னை சீர்திருத்தச் சிறைச் சாலைக்கு ஜூலை 13-ம் நாள் கொண்டு வரப்பட்டார். அரசாங்க வைத்திய நிபுணர்

கள் சுபாஷை ‘ எக்ஸ்ரே ’ மூலம் பரிசோதித்தனர். இரண்டு நுரையீரலிலும் காச நோய் பற்றிக்கொண் டிருப்பதாய் கண்டு பிடிக்கப் பட்டது. நிபுணர்களான பி. ஸி. ராயும், நீலரத்ன சர்க்காரும் பாபுவை ஸ்விட்ஜர்லாந்துக்கு அனுப் புவதே உசிதம் என்று கூறினர். அவரது அபாய நிலைமை யைச் சர்க்காரும் உணர்ந்து கொண்டனர். பாபுவை ஐரோப் பாவுக்கு அனுப்புவதற்குரிய உத்தரவும் தந்தனர்.

சொந்த நாட்டிலேயே நாடுகடத்தப் பட்டாற்போல் தேசப் பணிக்குரிய தருணம் மறுக்கப் பட்டும், உடல் நலம் குன்றியும், பாரத அன்னையை நினைந்து நினைந்து மனம் நெக்குவிட்டுருகிக்கொண்டே யிருந்தார் நமது தியாகச் சுடர் ஒளியாகிய சுபாஷ் சந்திரர்! சிறையில் சுபாஷ் என்றும் பாரத தேவியையே சிந்தித்துப்பொழுது போக்கிக் கொண்டிருந் தார். தமது முயற்சியால் ஓர் நவீன வங்காளத்தை நிர் மாணிக்க வேண்டு மென்பதே அவரது ஆர்வம். சிறைக்குள் பராசக்தியின் பக்திப் பெருக்கிலேயே சதா மூழ்கித் திளைத் துக்கொண்டிருந்தார்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

11. வெளிநாட்டில் பிரசாரம்

சுபாஷ் சந்திரர் வைத்தியர்களின் ஆலோசனைக் கிணங்க 1933-ம் ஆண்டு ஆரம்பத்தில் வியன்னு போய்ச் சேர்ந்தார். பூவர்த் பட்டணத்திலுள்ள ஓர் உயர்தர ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் அவரைச் சோதித்து வந்தனர். அவருக்கு ஏற்பட்டிருந்த வயிற்று வலியை சத்திர சிகிச்சையாலேயே அகற்ற வேண்டும் என்று வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப் பட்டனர். இந்தியா சட்ட சபையின் மாஜி தலைவர் வித்தல்பாய் பட்டேலும் வைத்திய சிகிச்சை பெறுவதற்கு அங்கே அது போது வந்திருந்தார். சுபாஷ் சந்திரர் அவருக்குப்பேருதவியாய் இருந்தார். ஆனுல் பலமாதங்கள்வரை சிகிச்சை பெற்றும் பயன் பெருமல் 1933 அக்டோபர் 22-ம் நாள் வித்தல்பாய் காலஞ்சென்ருர். அவரது சடலத்தை 'நற்குண்டா' எனும் கப்பலில் சுபாஷ் இந்தியாவுக்கு அனுப்பிவைத்து மகாத்மாவுக்கு தந்தியுமனுப்பினுர். வித்தல்பாயின் சடலம் நவம்பர் 9௳ இந்தியா வந்து சேர்ந்தது. அதுபோது பம்பாய்த் துறைமுகத்தில் மக்கள் ஆயிரக் கணக்கில் கூடிநின்று வித்தல்பாயின் பிரேதத்திற்கு மரியாதை செய்தனர். ராசோபசாரத்துடன் அவரது சடலம் தகனம் செய்யப்பட்டது. தமது மரணதறுவாயில் வித்தல்பாய் ஓர் உயில் எழுதிவைத்தார். நாட்டு நன்மையைத்தவிர பிறிதொன்றிற்குமே பாடுபட்டறியாத இப்பாரத புத்திரன் அவ்வுயிலின்படி வெளிநாட்டில் இந்திய நிலைமையைப் பற்றிப் பிரசாரம் செய்வதற்காக சுபாஷ் சந்திரர்பேரால் ஒரு லட்ச ரூபாய் எழுதி வைத்தார்.

அரசியற் சட்ட நிபுணரும் மாபெருந் தலைவருமான வித்தல்பாயை இழந்த துயரம் ஆறுதற்குமுன் சுபாஷ் பாபுவுக்கு பிறிதோர் துயரமும் அணுகிற்று. அருமைத் தந்தையாரின் உடல் நிலை அபாயத்தி லிருப்பதாக அவருக்குத்தந்தி கிடைத்

தது. உடனே தமது நோயையும் பொருட் படுத்தாமல் இறுதிக் காலத்தில் தம் தந்தையின் பக்கத்தி லிருப்பதற்காக ஆகாய விமானத்தில் யாத்திரை செய்து 1934 டிசம்பர் 4-ம் நாள் இரவு 8-30 மணிக்கு கராச்சி வந்து சேர்ந்தார். ஆயின் அதற்குள் தந்தையார் விண்ணுற்ற செய்தியைக் கேட்டு பாபு துயரத்துள் ஆழ்ந்து கலங்கினார். இச்சமயத்தில் சுங்கப் பரிசோதனை அதிகாரிகள், சுபாஷின் பெட்டியைச் சோதித்து டைப் அடிக்கப் பெற்றிருந்த "இந்தியப் போராட்டம்" எனும் நூலின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். மறுநாள் 4 மணிக்கு சுபாஷ் விமான வாயிலாக கல்கத்தா போய்ச் சேர்ந்தார். விமானத்தை விட்டிறங்கிய விடத்தும் போலீஸார் சுபாஷ் சந்திரருக்கு ஓர் தடை யுத்தரவைச் சார்பு செய்தனர்.

அவ்வுத்தரவு வங்காளக் கிரிமினல் திருத்தச் சட்டத்தின்படி வங்காள கவர்னரால் பிறப்பிக்கப்பட்டது. அதன்படி சுபாஷ் சந்திரர் தமது வீட்டிற்கே நேராகச் சென்றுவிட வேண்டும். மறு உத்தரவு வரையிலும் அவர் தமது வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லலாகாது. பந்துக்களைத் தவிர வேறெவருடனும் பேசுதலுங்கூடாது. அயல்நாட்டிலிருந்து வருங் கடிதங்களும், பார்ஸல்களும் போலீஸ் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பெற்ற பின்னரேதான் அவரிடம் கொடுக்கப்படும். இதை முன்னிட்டுப் போலீஸார் வீட்டிற்குள் புகுவதைத் தடை செய்யலாகாது. இவ்வுத்தரவு மீறப்படின் ஏழு வருடத் தண்டனை விதிக்கப்படும்.

தம் தந்தைக்குச் செலுத்த வேண்டிய ஈமக்கடனைப்புரிய வந்த சுபாஷ் சந்திரர் இத்தகைய தடை யுத்தரவைப் பெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்றார். ஒரு மாத காலம் இந்தியாவிலேயேதங்கினார். பாவம்! மீண்டும் நோய் தலை காட்டியது. எனவே, வங்க சர்க்காரின் கட்டளைப்படி பிரபல வைத்தியர்

கள் சுபாஷைச் சோதித்தனர். அவர்கள் மீண்டும் சுபாஷை வியன்னாவுக்கே அனுப்ப ஏற்பாடுகளைச் செய்தனர். 1935 ஜனவரி 10-ம் தேதி சுபாஷ் பாபு 'விக்டோரியா' எனும் கப்பலில் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானார். ஸி. ஐ. டி. கள் அவரைக் காவல் புரிந்தனர். கடல் யாத்திரை சுபாஷ் சந்திரரின் உடல் நிலைக்கு உதவியாகவே யிருந்தது. வழியில் எகிப்துக்கு விஜயஞ் செய்தார். அங்கே தலைவர், நஹாஸ் பாஷாவைப் பேட்டி கண்டார். வியன்னாவில் இரண்டு மாதம் சிகிச்சை பெற்றாலும் நோய் அகலவில்லை. எனவே அவ்வாண்டு ஏப்ரலில் நான்கு தடவைக்குமேல் வயிற்றில் சத்திரப் பிரயோகம் செய்யப்பட்டது. இறுதியில் நல்ல சுகம் பெற்று ஜெக்கஸ்லவேகியாவிலுள்ள மார்ல்ஸ்பாத்தில் நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்.

ஐரோப்பாவுக்கு உடல் நலத்தைக் கருதிச் சென்ற சுபாஷ் சந்திரர் தமது ஆரோக்கியத்தைப் பேணுவதிலேயே காலங்கழித்து வரவில்லை. ஆனால் அவர் ஐரோப்பாவின் அரசியல் நிலைமையைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார். ஹிட்லரும் முஸோலினியும் கையாண்டுவந்த கொள்கைகளின் நன்மை தீமைகளைப்பற்றி ஆராயலானார். முஸோலினியைக் கண்டு பேசினார். முஸோலினியின் பாஸிஸக் கொள்கையில் அவர் பற்றுடையவர் போலவும் காணப்பட்டார். ஆனால் அவர் அக்கொள்கையை விரும்பவேயில்லை. சோஷலிஸத்தின் தத்துவங்களே சுபாஷ் சந்திரரின் சுதந்திரத் தேட்டங் கொண்ட உள்ளத்திற்கு ஆறுதல் தந்தன.

1936 பிப்ரவரியில் சுபாஷ் அயர்லாந்துக்கு விஜயஞ்செய்தார். அயர்லாந்துக் குடியாட்சித் தலைவரும் டப்ளின் மேயரும், துறைமுகத்தில் பாபுவை வரவேற்று உபசரித்தனர்.

சுபாஷ் சந்திரரின் அயர்லாந்து விஜயத்தை கௌரவிப்பதற்காக தே-வாலரா அன்னவர்க்கு ஓர் விருந்தளித்தார். பல

பிரமுகர்கள் அதிற் கலந்துகொண்டனர். இவ்வாறு அவர் அங்குபெற்ற சிறப்பினுல் நம் தாய்நாடும் சிறப்புற்றது.

குடியாட்சித் தலைவராகிய தே-வாலரா இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஆர்வங் கொண்டனர். சுபாஷ் எழுதிய 'இந்தியப் போராட்டம்' எனும் நூலைப் பார்வையிட்டு மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார். இந்திய அரசியல் முறைகளேயும், அரசியற் கைதிகளின் நிலைமையையும் இந்நூல் தெள்ளிதாய் விளக்கிற்று. சுபாஷ் சந்திரர் தமது தந்தையின் அபாயமான உடல் நிலை கருதி கராச்சியில் வந்திறங்கினபோது சுங்க அதிகாரிகள் அவரது பெட்டியைச் சோதித்து மேற்குறித்த புத்தகத்தைத்தான் பறிமுதல் செய்தனர்.

1935 ஏப்ரல் 31உ புதன்கிழமை யன்று சுபாஷ் சந்திரர், நோபல் பரிசு பெற்றவரும், உலகோத்தமர்களில் ஒருவரும், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் ஆர்வங் கொண்டவரும், மகாத்மாவின் சரிதத்தை பிரஞ்சு மொழியில் வெளியிட்டவருமாகிய பெரியார் ரோமேன் ரோலந்தைப் போய்ப் பார்த்தார். அவரது சந்திப்பை சுபாஷ் சந்திரரின் வாய்மொழியிலேயே விளக்குதல் நன்று.

---

12. ரொமேன் ரோலந்து—சுபாஷ் சந்திப்பு

1935 ஏப்ரல் 3-ந் தேதி புதன்கிழமை காலை சூரியன் தகதகவெனப் பிரகாசிக்கின்றான். ஜினிவா புது மலர்ச்சி யுற்றாற்போன்று விளங்குகின்றது. வெகு தூரத்தில் நீல வானில் இருண்ட தோற்றத்தோடு, பனிக்கட்டிக் குல்லா யணிந்த சாலீப் மலை எழுந்து கண்ணைக் கவர்கின்றது. எங்கள் முன்னால் கண்ணாடியையொத்த ஜினிவா ஏரி தன்னைச் சுற்றி யிருக்கும் மாடமாளிகைகள் நிழற்றப் பரந்து தோன்று கின்றது. அப்போது நான் ஒரு தீர்த்த யாத்திரையாகப் புறப்பட்டேன். நான் ஐரோப்பாவில் வந்திறங்கிய இரண்டு வருடமாக எத்தனையோ முறை அந்தப் பெரியாரை—தீர்க்கதரிசியை, இந்திய நலன் கோரி வாழும் இந்திய ஞானப் பெரியாரை ரொமேன் ரோலந்தைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டேன். ஆனால் சுற்றுச் சார்புகள் முட்டுக்கட்டை போடலாயின. 1933-ல் முயன்றேன்; முடியாது போயிற்று. 1934-ல் பிரயாசைப்பட்டேன். அதுவும் நடைபெறவில்லை. கடைசியாக இம் முறை வெற்றிவரப் போகின்றது.

நான் மேற்படி பெரியாரைப் பார்க்கப் புறப்பட்டதும், மனம், மெய் ஊக்கமெல்லாம் சந்தோஷப் பெருவாரிதியில் மிதக்கலாயின. ஆயினும் இடையிடையே சில சந்தேகங்கள் வந்து தோன்றாமலில்லை. "இம்மகானால் ஊக்க மூட்டப்படு வேனோ அல்லது ஏமாற்ற மடைந்து திரும்புவேனோ? வாழ்க்கையில் குறுக்கிடத்தகுந்த தடைக் கற்களை இவர் உணர்வாரா, அல்லது ஒவ்வொரு காலத்திலும், தேசத்திலும் நடைபெறக்கூடிய தர்ம யுத்தங்களில் வந்துறும் கஷ்டங் கட்கும் மருந்து சொல்வாரா? எல்லாவற்றையும்விட இந்தியச் சரித்திரமென்னும் சுவரில் எழுதப்பட்டிருக்கும் அதன் தலைவிதியை வாசித்துச் சொல்வாரா?" இவ்வண்ணமே



எல்லைப்புற காந்தியும் வங்கவீரரும்

பலபல கேள்விகளை எனக்குள்ளேயே கேட்டுக்கொண்டேன். சரியாக இரண்டு மணி நேரம் என் மோட்டார் ஜினிவா ஏரியைச் சுற்றியிருக்கும் வளைந்த ரோடு வழியாக ஓடிற்று. அன்று சீதோஷ்ணம் மனோரம்மியமாக இருந்ததால் ஸ்விஸ்ரி வீயராவைச் சுற்றிப் போனபோது ஸ்விட்ஜர்லாந்தில் மிக அழகான ஓரிடத்தைப் பார்த்த பெறும் பேற்றையடைந்தேன். நாங்கள் வில்லெனூல் என்ற இடத்திற்கு வந்ததும், மோட்டாரின் வேகம் குறைந்து கடைசியில் வில்லா ஆல்கா என்ற கட்டிடத்தின் முன் நின்றது. வில்லா ஆல்காதான் நான் பார்க்கச்சென்ற பிரஞ்சுப் பெரியாரின் உறையுள்.

அல்கா உண்மையில் ஓர் ரம்மியமான இடம். சுற்றிலும் உயரமான குன்றுகள் கம்பீரமாக நிற்கின்றன. அதனிடையிலிருந்து ஏரியை நோக்கி இருக்கிறது அல்கா. அதனைச் சுற்றிலும் இயற்கை அமைப்பு, அமைதி, அழகு, நடனமிடுகின்றன. ஒரு தவமுனிவன் தங்குவதற்கு அது ஓர் தகுதியான இடமென்று ஆயிரந் தரம் சொல்லலாம்.

நான் காரிலிருந்து இறங்கி ஒரு மணியை அடித்தேன். உடன் ஒரு வாயிலைத் திறந்துகொண்டு ஒரு பெண்மணி வந்தாள். அவள் அதிக உயரமில்லை. அளவுகடந்த அனுதாபமுடையவர்போல் தோற்றினார். முகத்தில் ஓர் தனி உயிர்க்களை தென்பட்டது. அந்த அம்மையார்தான் ஸ்ரீமதி ரொமேன் ரோலந்து. இவர் என்னை வரவேற்று முடியுமுன்னரே, மற்றொரு வாயில் திறக்கப்பட்டு ஒரு உயரமான மனிதர் கூரிய கண்களுடன், விளங்கிய முகத்துடன் என் முன் வந்து நின்றார். ஆம், இவர்தான் இதற்கு முன் நான் பலமுறை படத்தில் கண்டிருக்கும் பெரியார். அவர் முகம் மக்களுக்கேற்படும் தொல்லைகளால் கலங்கி யிருந்தது.

அதனைக் கூர்ந்து நோக்கினால் மக்கள்பால் இரக்கம் கொண்டு அதனால் சோர்ந்திருந்தது என்று சொல்லாமே

தவிர, வாழ்க்கையில் தோல்வியுற்றுச் சோர்ந்திருந்தது என்று சொல்லமுடியாது. அவர் பேசத் தொடங்கியதும் முகத்தில் நிறம் மாறியது. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றிலும் நம்பிக்கையும், உயிரும் ததும்பியிருந்தன.

அவர் என்னிடம் இந்தியாவிலுள்ள நண்பர்களைப்பற்றியும், நாட்டைப்பற்றியுமுள்ள க்ஷேம சமாசாரங்களை விசாரித்தார். அப்பால் ஆழமான பல விஷயங்களைப்பற்றிப் பேசலானோம். ஸ்ரீ. ரோலந்துக்கு ஆங்கிலம் தெரியாது. நான் பிரஞ்சு அறியேன். ஆகையால் மாடிமாயில் ரோலந்து, அன்னை ரோலந்து, ஆகிய இருவரையும் துபாஷிகளாக வைத்துக் கொண்டோம். எனக்கு இந்தியப் போராட்டம் கடைசியாக அடைந்திருக்கும் மாற்றங்களை எடுத்துக்கூறி அவருடைய அபிப்பிராயத்தைத் தெரியவேண்டுமென்பது முக்கிய ஆசை. அதற்காக இந்தியாவின் நிலைமையை நானறிந்து கொண்ட மாதிரியிலும் நிலைமையிலும் நன்கு விளக்கிக் கூறினேன்.

கடந்த 14 வருடங்களில் இந்தியப் போராட்டம் நடைபெற ஆதாரமாக இருந்த இரு யுத்த தர்மங்கள் (1) சத்யாக்ரகம் அல்லது பலாத்காரமற்ற எதிர்ப்பும் (2) முதலாளிகள், தொழிலாளிகள், விவசாயிகள், மிராசுதார்கள் ஆகிய அனைவரும் ஒரே முகமாய் சாத்வீகப் படை தாங்கி எதிர்த்து நிற்பது என்ற இரண்டுமே.

சத்யாக்ரகத்தைப் பற்றிய இந்தியாவின் கருத்து இதுவாகும் :—சத்யாக்ரகதர்மம் இந்தியாவுக்குள் சர்க்கார் காரியங்கள் நடைபெறாதபடி தடைசெய்துவிடுதல்.

இந்தியாவுக்கு வெளியே, சத்யாக்கிரகத்தின் புனிதமான சக்தி பிரிட்டிஷார்களின் மனதைப் பண்படுத்திவிடும். இந்த இரண்டு விளைவும் இந்தியா படை தாங்காமலும், இரத்தம் சிந்தாமலும் சுயராஜ்யத்தை பெற்றுவிடத் தகுந்த தரு

ணத்தை உண்டுபண்ணிவிடும். இவைகள்தான் சத்யாக்ரக கதர் உற்பத்தியின்பால் இந்தியா வைத்த நம்பிக்கை. ஆனால் இந்நம்பிக்கை வெற்றிபெறவில்லை. இந்தியாவுக்குள் அது பலாத்காரமற்ற ஒரு போராட்ட உணர்ச்சியை உற்பத்தி செய்தது உண்மை. ஆனால் சர்க்கார் அதிகாரிகளின் மனதில் எவ்வித மாற்றத்தையும் உண்டுபண்ணாததால் "மன்னரின் ஆட்சி" ஒழுங்காக நடைபெற்றுக்கொண்டே சென்றது. இந்தியாவுக்கு வெளியே, பெரும் மனமுடைய சில ஆங்கிலேயர்கள் காந்திஜீயின் தத்துவத்தால் மனமாற்றமடைந்ததுண்டு. ஆனால் பிரிட்டிஷ் பிரஜைகள் எந்தவிதமான கவலையும் காண்பிக்கவில்லை. அவர்களது தன்னல உணர்ச்சி சத்யாக்ரகத்தின் தத்துவ உணர்ச்சியை அடிமைப் படுத்திவிட்டது.

இவ்வாறு இந்திய விடுதலைப் போராட்டம் தோல்வியுற்றதும், காங்கிரஸ் தலைவர்களுள் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் உதயமாயிற்று. ஒரு பிரிவினர் சட்டசபைக்குள் புகுந்து வேலைசெய்வதென்ற பழங் கொள்கையைப் பின்பற்றினர். காந்திஜீயும் அவரது வைதீகத் துணைவர்கள் சிலரும் சத்யாக்ரகப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டவுடன் கிராமப் புனருத்தாரணத்திற்காகப் போய்விட்டனர். ஆனால், அதிதீவிர நோக்கமுடையாராகிய ஒரு பகுதியின் புதுமாதிரியான லக்ஷியங்களால் இயக்கப்பட்டு காங்கிரஸ் அபேதவாதக்கட்சி யென்ற ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட கருத்துக் கொண்ட ஒரு பெரிய முகவுரைக்குப் பின்னர் நான் ஸ்ரீ ரோலந்திடம் "ஒன்று பட்டு நின்ற போராட்டப் படை, துண்டுபட்டுப்போன நிலைமையில் காந்திஜீயின் சத்யாக்ரக தர்மத்திலிருந்து மாறுபட்ட வழியில் ஒரு புதிய போராட்டத்தை ஆரம்பித்தாலென்ன?" என்று வினவினேன். உடன் அவர்—காந்திஜீயின் சத்யா

க்ரகம் தோல்வியுற்றதென்றால் அதனைக் கேட்கப் பெரிதும் வருத்த முறுகின்றேன். மகா யுத்தத்தின் பின்னர் உலகம் முழுதும், இரத்தம் சிந்துதலிலும் பகைமை யுணர்ச்சியிலும் சோர்ந்து வெறுப்புற்றபோது, அரசியல் சாதனங்களை அடைய காந்திஜீ ஒரு புதிய முறையுடன் முன் வந்ததும் ஒரு புதிய ஆன்ம உணர்ச்சி உலகில் ஜொலிக்க ஆரம்பித்தது. காந்திஜீ உலகில் எழுப்பிய மனோபாவம் மிகமிகப் பெரிது.

நான் :—நாங்கள், உலகாயுதவாதம் தலை சிறந்திருக்கும் இந்த உலகிற்கு காந்திஜீயின் தத்துவங்கள் அளவுக்கு மிஞ்சி உயர்ந்தவை யென்று நினைக்கிறோம். மேலும் அவர் எதிரிகளிடத்தில் அளவுக்கு மிஞ்சியே நேர்மையுடன் நடந்து கொள்கிறார். அன்றியும் பிரிட்டிஷார்கள் இந்தியாவிலிருக்க வேண்டுமென்று யாரும் விரும்பவில்லையாயினும் அவர்களது மேலான சரீர பலத்தினாலேயே இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு கூறி விட்டு சத்யாக்ரக இயக்கம் தோல்வியுற்ற பின், விடுதலைக்கான போராட்டம் தொடர்ந்து நடப்பதைக் காண ஆசைப் படுவாரா அல்லது இந்தியா மீதுள்ள பற்றுதலை விட்டு விடுவாராவென்று உசாவினேன். அதற்கு ஸ்ரீ. ரோலந்து :—“ போராட்டம் எவ்வழியிலும் நடை பெற்றுக் கொண்டுதா னிருக்கவேண்டும்.” என்று அழுத்தமாக கூறினார்.

“ இந்தியாமீது நட்புரிமை காண்பிக்கும் பல ஐரோப்பிய கனவான்கள் காந்திஜீயின் சாத்வீகப் போராட்டத்தைக் கண்டு மயங்கியே இந்தியா மீது அநுதாபம் காண்பிப்பதாகக் கூறுகின்றார்கள் ” என்றேன்.

இக்கூற்றுக்கு ஸ்ரீ. ரோலந்து இசையவில்லை. ஆனால் “சத்யாக்ரகம் தோல்வியுற்றதென்றால் நான் வருந்துகிறேன்”

என்று மட்டிலும் கூறினர். பின் எவ்வளவு துன்பம் வந்தாலும் பொறுத்துக் கொண்டு இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று சொன்னர்.

இத்தகைய ஒரு பதிலையே நான் எதிர் பார்த்தேன். உண்மையான தத்துவத்தால் உழைக்கப்படுபவர்கள் ஸ்ரீ. ரோலந்தைப் போன்று தான் அபிப்பிராயம் சொல்லுவார்கள். அவர் ஆகாயக் கோட்டை கட்டுபவரோ, ஆகாயத்தில் நின்று பேசுபவரோ அல்ல. நான் பிற்பால் சொன்னேன்:—"ஐரோப்பியர் சிலர், ருஷ்யாவில் ஒன்றன்பின்ஒன்ருக பணக்காரர் இயக்கமும், தொழிலாளர் இயக்கமும், என இரு விதக் கிளர்ச்சிகள் நடந்ததுபோல் இந்தியாவிலும் தேசீய ஜன நாயகக் கிளர்ச்சியும் சமூக சீர்திருத்தக் கிளர்ச்சியுமிருக்க வேண்டுகின்றூர்கள். எனது அபிப்பிராயம் அப்படியல்ல. சமூக, பொருளாதாரக் கிளர்ச்சி யொருபால் நடைபெறும் போதே, அரசியல் கிளர்ச்சியும் மற்ருெருபால் நடைபெற வேண்டும். எந்தக் கட்சி அரசியல் விடுதலையைக் கொண்டு வருகிறதோ அந்தக் கட்சியே சமூகப் பொருளாதாரத் திட்டங்களையும் நடத்தி வைக்க வேண்டும்.

அதுபற்றி ஸ்ரீ. ரோலந்தின் கருத்து என்ன:—

இக்கேள்விக்கு அவர் பதில் சொல்லத் தயங்கினர். ஏனெனில் இந்திய நிலைமை அவருக்கு நன்கு தெரியாது. நான் மேலும் கேள்வி கேட்டேன்.

காங்கிரசின் ஐக்கியப் படையெடுப்பு தோற்று விட்டதால் அதிலுள்ள தீவிர வாதிகள் முன்வந்து தொழிலாளர், விவசாயிகள் ஆகியவர்களோடு சேர்ந்து ஓர் புதுக்கிளர்ச்சியை ஆரம்பித்தாலென்ன?

ஸ்ரீ. ரோலந்து:—இந்தியா பொருளாதாரப் பிரச்னைகளை எடுத்துக் கொள்ள வேண்டிய காலம் நெருங்கி விட்டது. காந்திஜீ தம்மனதில் இவ்விஷயத்தைப்பற்றி ஆழமாகயோசிக்க

வேண்டுமென்று நான் ஏற்கனவே அவருக்கு எழுதியிருக்கிறேன்.

இந்தியக் காங்கிரசின் நிலைமையைப் பற்றி கூறுகின்ற போது ஸ்ரீ. ரோலந்து அடியில் வருமாறு சொன்னார்:—

நான் இரண்டு கட்சிகட்கிடையிலோ இரண்டு வகுப்புக் கட்சி கட்கிடையிலோ தலையிட மாட்டேன். எனக்கு அரசியல் கட்சிகளில் கவலையில்லை. ஆனால் அவர்களுடைய லட்சியமெது வோ அதில்தான் நாட்டம். எந்த அரசியல் கட்சியாரும் தொழிலாளிகளை முன்னேற்றவே உழைக்க வேண்டும். காந்திஜீ அல்லது அவரது கட்சியார் தொழிலாளிகள் உயர் கதிக்கு மறுப்பாக நின்று கொண்டிருப்பார்களானால், அல்லது தொழிலாளிகள் நலத்துக்கு உழைக்கும் கட்சியைவிட்டு நீங்கியாவது இருப்பார்களானால் நான் அந்தத் தொழிலாளிகளுடனேயே சேர்வேன். ஏனெனில் தர்மமும், முன்னேற வேண்டிய அவசியமும் தொழிலாளிகளிடத்திலேயே இருக்கின்றன.

இந்தச் சொற்களைக்கேட்டதும், நான் ஆச்சரியப்பட்டுவிட்டேன். ஒருபோதும் ஸ்ரீ. ரோலந்து இவ்வளவு தூரம் துறந்து பேசும் நிலைமைக்கு வரமாட்டாரென்று நினைத்திருந்தேன்.

இவ்வாறு நாங்கள் பேசிக் கோண்டிருந்ததால் ஸ்ரீ. ரோலந்துக்கு நான் கொடுத்த சிரமம் அதிகமாகும். ஆதலால் கொஞ்சம் இளைப்பாறவிட நினைத்தேன். நல்ல வேளையாக அப்போது தேநீர் தயாராயிருப்பதாகச் சொல்லப்பட்டது. உடன் அடுத்த அறை யொன்றுக்குச் சென்றோம்.

அங்கு சில கோப்பை தேநீரைப் பருகியதும், எங்கள் பேச்சுகள் தடையின்றி மேலே சென்றது.

சுமார் இரண்டரை மணிநேரம் பேசினோம். பல விஷயங்கள் எங்கள் பேச்சுக்கு இலக்காயின. ஸ்ரீ. ரோலந்துக்கு காங்கிரஸ் அபேதவாதக் கட்சியில் நிரம்பப் பற்று. பண்டித ஜவஹர்லால் ே வையும் இதரர்களையும் தொடர்ந்து சிறை

யிலிட்டிருப்பதைப்பற்றி மிகவும் வருத்தப்பட்டார். மகாத்மா வின் செயல், பேச்சு, எழுத்து எல்லாம் அவருக்கு அளவிலா ஆச்சரியத்தைக் கொடுத்தன. உதாரணமாக அபேதவாதத்தைப்பற்றி பேசியபோது ஸ்ரீ. ரோலந்து காந்திஜிக்கு அபேதவாதத்திலிருக்கும் அனுதாபத்தைக் காண்பிப்பதற்காக ஒரு பயிலை (பத்திரிகைக் கட்டை) எடுத்துக் காண்பித்தார். காந்திஜீயையும் அவரது அருந்திறமையையும்பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். நான் மகாத்மா பொருளாதார பிரச்னைகளில் உறுதியான ஒரு முறையைக் கைக்கொள்ள வில்லையென்று துணிந்து சொன்னேன். காந்திஜீ அரசியலோ சமூக இயலோ அன்றி பொருளாதார இயலோ எதுவாயினும் சரி எல்லாவற்றிலும் ஒரு பொன் யுகத்தை நம்புகிறார். பிற்பால் நான், இளைஞர்கள் காந்திஜீயின் தலைமைப் பதவிக்கு என்னென்ன ஆட்சேபங்களைச் சொல்கிறார்களென்று கூறினேன். காந்திஜீ தம் திட்டங்கள் முழுவதையும் சொல்வதில்லை. அரசியல் எதிரிகளை சமூகப் பிரஷ்டம் செய்ய வேண்டுமென்பதற்குச் செவிசாய்ப்பதில்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் மனம் மாற்றமடையும் என்று நம்பிக்கை கொள்கிறார் என்றேன். பிறகு நான் பேசுங்கால், "என்றாலும் காந்திஜீயை எதிர்ப்பது அணுவளவேனும் எங்கட்கு சம்மதமாயில்லை. ஏனெனில் இந்திய சரித்திரத்தில் எந்த மூலையிலும் ஓர் உவமை கண்டுவிட முடியாதபடியான அவ்வளவு பெரிய ஊழியத்தை நாட்டுக்குச் செய்திருக்கிறார். அன்றி இந்தியாவை உலக மதிப்பில் சிறந்து விளங்குமாறு உயர்த்திவிட்டவர் அவரே. ஆனால் நாங்கள் எங்கள் தேசத்தை எந்த மனிதரையும்விட அதிகமாக விரும்புகிறோம்."

பின் நான் ஸ்ரீ. ரோலந்திடம் அவர் எந்தெந்தக் கொள்கைகட்காகப் பாடுபடுகிறாரென்று சுருக்கமாகச் சொல்ல முடியுமாவென்றேன்.

அதற்கு அவர் கூறியதாவது :—

(1) சர்வதேச சமூக அரசியல், அதாவது எல்லா வருக்கத்தாருக்கும் சமத்துவமிருக்கவேண்டு மென்னும் தத்துவம்.

(2) கொள்ளையடிக்கப் படுவர்கட்கு நியாயம் வழங்குதல் :—அதாவது கொள்ளையடிப்பவர்களென்றும், கொள்ளையடிக்கப்படுவார்களென்றும் இரு சாரார் இருத்தல் ஆகாது. அவரவர் வாழ்க்கைக்கு வேண்டுவதை உழைத்துச் சம்பாதிக்க வேண்டும்.

(3) அடிமைப்பட்ட எல்லா சமூகத்தாருக்கும் விடுதலை அளித்தல்.

(4) புருஷர்களைப்போன்று பெண்கட்கு உரிமை வழங்குதல்.

இவைகளே தம் கொள்கை அல்லது தாம் பாடுபடும் லட்சியம் என்று கூறினார். பிறகு அவற்றை விஸ்தாரமாகக் கூற முயன்றார்.

13. ஏனோ இப்பதட்டம்?

இந்தியாவைப்பற்றி வெளிநாடுகளில் ஒரு கூட்டத்தார் இடைவிடாது பொய்ப் பிரசாரங்களைச் செய்துகொண்டேயிருக்கின்றனர். இந்தியாவின் உண்மை நிலைமையைப்பற்றி அவர்கள் யாதொன்றும் அறியார். இந்தியரின் நாகரிகத்தைப் பலவழிகளிலும் இழித்துரைக்கும் பத்திரிகைகளும் புத்தகங்களும் அங்கு பிரசுரிக்கப்படுகின்றன. திரைப் படங்களிலும் பொது மேடைப் பேச்சுகளிலும் இந்தியர்கள் காட்டுமிராண்டிகளாய்ச் சித்திரித்துக் காண்பிக்கப்படுகின்றனர். மேயோ என்பவள் எழுதின 'இந்தியத்தாய்' (Mother India) எனும் புத்தகமும், மகாத்மா காந்தியைக் கோவணாண்டி என இழித்துப் பேசிய சர்ச்சில் துரை மகனின் வாய்க் கொழுப்பும் இதற்குத் தக்க சான்றுகளாகும். ஆகவே, வித்தல்பாய் பட்டேல் ஒரு பெருந் தொகையை சுபாஷ் சந்திரரின் பேரால் உயில் எழுதி வைத்ததற்கு நாம் என்றும் அவருக்கு கடமைப்பட்டுள்ளோம்.

சுபாஷ் ஐரோப்பாவில் ஏறக்குறைய மூன்று வருடங்கள் தங்கி இந்திய அரசியல் நிலைமையை மேனாட்டவர்க்கு நன்றாய் எடுத்து விளக்கி வந்தார். அம்மூன்று வருடங்கட்குமிடையே ஒரு முறை தான் தமது தந்தையின் மரண சம்பந்தமாய் தாய்நாட்டிற்குத் திரும்பி வந்தார். நீண்டகாலம் அயல்நாட்டில் இருந்துவிட்டபடியால் இந்தியாவிற்குத் திரும்பிவிட விழைந்தார். இவரது கருத்தை உணர்ந்த வீயன்னாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகர், "தாங்கள் தற்போது இந்தியாவுக்குச் செல்வதாயின் தங்களது சுதந்திரம் போய்விடுமென்று" எச்சரிக்கை செய்தார். ஆனால் சிந்தை துணிந்த இவ் இளஞ்சிங்கம் 1936 மார்ச் 29-ம் நாள் 'காண்டி வார்டி' எனும் இத்தாலியக் கப்பலில் இந்தியா நோக்கிப் பிரயாணமானார்.

கப்பல் செட் துறைமுகத்தை வந்தடைந்ததும் அதிகாரிகள் இவரது பாஸ்போர்ட்டை இவரிடமிருந்து பிடுங்கிக்கொண்டனர். இவரைக் கைதுசெய்வதற்கும் முயற்சி நடைபெற்றது. ஆனால், கப்பல் தலைவர் இவரைக் கைது செய்வதற்கு இடமளிக்கவில்லை. பாபுவைப் பார்ப்பதற்கு வந்திருந்த எகிப்தியத் தலைவர்களும் அவரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. கப்பல் துறைமுகத்தைவிட்டு நகர்ந்ததுமே அவரது 'பாஸ்போர்ட்' அவரிடம் திரும்பக் கொடுக்கப்பட்டது.

ஏப்ரல் 8உ கப்பல் பம்பாய்த் துறைமுகத்திற்கு வருவதாயிருந்தது. இதை யுணர்ந்த சர்க்கார் 7உ இரவு முதற்கொண்டே பலத்த ஏற்பாடுகள் செய்தனர். 8உ காலை 4½மணி முதற்கொண்டே ரிசர்வ் படையைச் சேர்ந்த 200 படைவீரர்கள் துறைமுகத்தைக்காக்க ஆரம்பித்தனர். மக்களும் ஆயிரக்கணக்காகக் கூடிக் கப்பலின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு பக்கத்தில் இவ்வீரத்தியாகியைச் சிறைப்படுத்த கான்பகதூர் பேட்டிகாரா என்னும் இரகசியப் போலீஸ் இலாகா உதவிக் கமிஷனர் மிகுந்த கவனத்துடன் பாபு வரவிருக்கும் படிக்கட்டின்மீது காத்துக் கொண்டிருந்தார். சுபாஷ் இங்கு இறங்கினால் கைது செய்யப்படுவாரென்றும், கொழும்புக்குச் செல்வாரானால் கைது செய்யப்பட மாட்டாரென்றும் அவருக்கு அறிவித்தார்கள். அதை கேட்ட சுபாஷ், "பம்பாயில்தான் நான் இறங்குவேன்" என்று கூறினார். கப்பல் கரையை அடைந்ததும் ஆவலுடன் கூடிக் காத்துக் கொண்டிருந்த மக்கள் "சுபாஷ் பாபுவுக்கு ஜே" என்று எழுப்பின முழக்கம் விண்ணையும் அதிரச் செய்தது. ஆயிரக் கணக்கான பூமாலைகள் மலைபோல் வீழ்ந்து குவிந்தன. பின்னர் புன்முறுவல் பூத்த முகத்துடன் மக்களை நோக்கிக் கை கூப்பிய வண்ணமாய், "பரிபூரணச் சுதந்தரக் கொடி என்றும் தாழாது பறந்து கொண்டிருப்பதாக" என்றார்.



தமது உடல் நலத்தைப்பற்றி வினவியபோது, "நோய் குணமாகி விட்டது. ஆனால் வயிற்றில் இன்னும் சிறிது வலி யிருக்கிற" தென்றார். இவ்வாறு சிலநிமிடங்களே பேசிக் கொண்டிருந்தார். அதற்குள் அவர் 1818-ம் வருஷத்திய 3-வது ரெகுலேஷன்படிக் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து செல்லப் பட்டார்.

போஸ் கைதுசெய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு பெயிஸ்பூரில் காங்கிரஸ் மகாசபை கூடியது. அங்கு விஜயஞ் செய்திருந்த தலைவர்களும் தேசமக்களும், போஸின் வருகையை மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்துக்கொண்டே யிருந்தனர். ஆனால் இந்திய மண்ணிற் காலடியெடுத்து வைத்ததும் கைது செய்யப்பட்ட செய்தி அனைவரையும் புண் படுத்திற்று. ராஷ்ட்ரபதி ஜவஹர்லால் நேருவும் தமது

தலைமையுரையில், "லட்சுமணபுரிக் காங்கிரசுக்குப் பின்னர் காரியக் கமிட்டியில் தோழர் சுபாஷ் சந்திரரையும் ஓர் அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொண்டேன். ஆனால் அவர் பம்பாய் வந்ததும் நம்மிடமிருந்து பறித்துப் போகப்பட்டார். நமது நம்பிக்கைக்குரியவரும் ஆண்மை மிகுந்தவருமான தோழர் இவ்வருஷம் முழுதுமே நம்மிடம் இல்லாமற் போய்விட்டார்" என்று கூறி வருந்தினார். சுபாஷ் சந்திரர் கைதுசெய்யப் பட்டதைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றும் பொருட்டு மே 10-ம் நாள் சுபாஷ்தினமாகக் கொண்டாட வேண்டுமென ராஷ்ட்ரபதி கட்டளை பிறப்பித்தார். இந்தியா பர்மா, இலங்கை முதலான எல்லா நாடுகளிலுமுள்ள மக்கள் எங்கும் கூட்டங்கள் கூட்டுவித்துப் பிரஜா உரிமை பறிமுதல் செய்யப்படுவதை கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றினர். போஸ் கைது செய்யப்பெற்றதைக் கண்டித்து விவாதிப்பதற்காக இந்தியா சட்டசபையும் ஒத்தி வைக்கப்பட்டது. கல்கத்தா நகர சபையிலும் இதுபற்றியோர் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாபுவின் உடல் நலத்தைக் கருதி அவரை அவரது சகோதரர் ஸ்ரீஜத் சரத் சந்திர போஸின் வீட்டிலேயே 'பந்தோபஸ்து'க் கைதியாக வைத்துவிட்டனர். சிறைக்குச் செல்லுங்கால் சுபாஷின் சரீர எடை 172 பவுண்டு. தற்போது அஃது 152 பவுண்டாகக் குறைந்துபோய் விட்டது. இச் சமயத்தில், இந்தியா எங்கணும் புதிய அரசியலின் கீழ் தேர்தல் பிரசாரம் அதிதீவிரமாய் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாணவர்களும் தேர்தல் இயக்கத்தில் ஈடுபட்டனர். அவர்களிற் சிலருக்கு 144-வது தடையுத்தரவு சார்பு செய்யப்பட்டது. பொதுக் கூட்டங்களிற் கலந்துகொண்டு சொற்பொழிவுகளைக் கேட்டதற்காக அவர்களிற் பலரை அதிகாரிகள் பிரம்பாலடித்துத் துன்புறுத்தினர். இது காரணமாக இருமாணவர்

கள் தற்கொலையும் செய்துகொண்டனர். என்னே பாரத மக்களின் நிலைமை! தேர்தல் நெருக்கடியால் ஏற்பட்ட தேசிய உணர்ச்சியும், காங்கிரஸ் மகா சபையின்மீது மக்கட்குள்ள மதிப்பும் என்றுங் காணுதவாறு பெருகிக்கொண்டே வந்தது.

இவ்வித நிலைமையில் எவ்வித நிபந்தனையுமின்றி 1937 மார்ச் 17-ம் நாள் சுபாஷ் சந்திரரை அரசாங்கத்தினர் விடுதலை செய்தனர். இடையருத தியாகத்திற்கும் சிறைத் துன்பத்திற்கும் ஆளாக்கப் பெற்ற பாபுவின் உடல் நிலை இன்னும் முற்றிலும் திருந்திய பாடில்லை. சுபாஷ் சந்திரர் நோய் வாய்ப்பட்ட இந்நிலையிலும் சும்மாவிருக்க விரும்பவில்லை. தேச பக்த சென்குப்தாவுக்கும் பாபு சுபாஷுக்கு மிடையே நிலவிய அபிப்பிராய வேறுபாட்டால் தான் வங்காளக் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுப் பல ஆண்டுகள் வரையிலும் வங்கக் காங்கிரஸ் வேலைகள் தடைபட்டுக் கிடந்தன. மாகாண காங்கிரஸ் கமிட்டி ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்மையால் சீர் குலைந்து இருந்தது. அதனைச் சீர்திருத்தும் வேலையையே சுபாஷ் முதன்மையாக மேற்கொண்டு உழைக்கலானுர்.

14. சுயராஜ்ய பவனத்தில் சந்திரர்

விடுதலைபெற்ற சுபாஷை திரு. மகாதேவ தேசாய் (காந்திஜீயின் காரியதரிசி) கல்கத்தா சென்று பார்த்துவிட்டுத் திரும்பினார். அந்நாள் தொட்டு காந்திஜீ சுபாஷை காண வேண்டுமென்று மிகுந்த தேட்டங் கொண்டிருந்தார். எனவே 1937 ஏப்ரல் 26-தேதி சுபாஷ் பாபு மகாத்மாவை ஆனந்த பவனத்தில் சந்தித்தார். அதுபோது விண் மீன்கள் ஒன்றை யொன்று மோதிப்பேரொளியைப் பிறப்பிப்பது போல் தியாகச் சுடர் ஒளி வீசும் இவ் இரு நட்சத்திரங்களாகிய மகாத்மாவும் சுபாஷும் ஒருவரை ஒருவர் தழுவி உள்ளம் நெக்குவிட்டுருகிய காட்சியை பாரதநாட்டு மக்களெல் லோரும் புகழ்ந்துரைத்தனர். எத்தகைய கல்நெஞ்சையும் கரைத்துவிடும் தன்மைத்தாயிருந்தது அந்நிகழ்ச்சி. அவரது உடல் நிலையைக்கண்டு வருந்திய காந்திஜீ ஆறுமாதகால வரை யிலும் தமது உடலையே கவனித்து வரவேண்டுமென சுபா ஷைக் கேட்டுக் கொண்டார்.

காங்கிரஸ் தலைவர்கள் மந்திரிப்பதவியை ஏற்றதன் சம் பந்தமாக இருவருக்குள் பேச்சு நடைபெற்றது. அது போது சுபாஷ், மந்திரிகள் உறுதியுடனிருக்கவேண்டுமென வும், காங்கிரஸின் கொள்கையை அவர்கள் தவற விட்டுவிட லாகாதெனவும் தாம் சொல்ல விரும்புவதாக தெரிவித்தார். தவிர, இடைக்கால மந்திரிசபையின் நியமனங்களின் ஊழலை யும் அதன் சட்ட விரோதமான அமைப்பையும் பொதுக் கூட் டங்களின் வாயிலாக மக்கட்கு எடுத்துக்காட்டி வரவேண்டு மென வற்புறுத்தினார். அதன் சார்பில் சண்டமாருதம் போன்ற ஒரு தீவிரப்பிரசாரம் நாடெங்கணும் நடாத்தவேண்டு மென்று அவர் விரும்பினார். காந்திஜீயின் செயல் முறைகளை யும் நோக்கத்தையும்உணர்ந்து சுபாஷ் சந்திரர் மிகுந்த ஆறுதல்

அடைந்தார். பண்டித ஜவஹர்லால்நேரு தற்கால அரசியல் நிலைமையை சுபாஷ் பாபுவுக்குத் தெளிவாய் எடுத்து விளக்கினார்.

இதற்குமுன்னர் சுபாஷ் சந்திரர் மகாத்மா காந்தியின் கொள்கைகளை ஆதரித்ததில்லை. சத்தியாக்கிரகப் போராட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மனமாற்றத்திற்குரிய வேலையொன்றும் செய்துவிடவில்லை என்று அவர் கருதி வந்தார். சர்க்காருடன் சமரசம் பேசும் தருணங்களில் தம் கட்சியின் நிலைமையை உள்ளவாறே எடுத்துக்கூறித் தமது போராட்ட முறைகளின் இரகசியத்தை வெளியாக்கிவிடும் மகாத்மாவின் செயல் முறைகளை அவர் வன்மையுடன் கண்டித்து வந்தார். பொருளாதாரப் பிரச்னையின் சார்பில் மகாத்மா செய்து வருபவை நிரந்தரமான பலனை அளியாதென்றும் கருதினார். 1933-ம் வருடத்தில் மகாத்மா சட்டமறுப்புப் போரை நிறுத்தினார். அச்சமயத்தில் வித்தல்பாய் பட்டேல் சுபாஷ் சந்திரர் ஆகிய இருவரும் வியன்னாவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். சட்டமறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்ட செய்தியைக் கேட்டதுமே மகாத்மாவின்மீது இவ்விரு வீரர்களும் சீறிப் பாய்ந்தனர். இத்தகைய பிற்போக்கான செயல் நமது தோல்வியையே காட்டுகிறது என்று அவ்விருவரும் கர்ஜித்தார்கள். மகாத்மாவின் தலைமையில் நாட்டின் விடுதலைப் போர் விருத்தியடையாதெனவும் அவர்கள் கூறத் தலைப்பட்டுவிட்டனர்.

ஆயின், இன்றைய நிலைமையில் சுபாஷ் சந்திரர் மனமகிழ்ச்சி யடைந்துள்ளார். இந்தியாவிலுள்ள பதினொரு மாகாணங்களில் ஏழு மாகாணங்கள் காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாகத்திலிருந்து வருகின்றதைக்கண்டு மகிழ்கிறார். காங்கிரஸ் மந்திரிகள் மக்களின் ஊழியர்களே என்ற உண்மையை அவர்கள் நிரூபித்து வருகின்றனர் அல்லவா? குறைந்த சம்பளம் பெற்று கிராமாந்திரங்கள்தோறும் மாட்டு வண்டிகளி

லும் ஏறிச்சென்று ஏழை மக்களுடன் உணவருந்தி அவரது நிலைமையை அறிந்துவரும் இவர்களது மனப்பான்மை எவரது உள்ளத்தைத்தான் அள்ளாமல் போய்விடும்! தவிர அரசாங்கத்தைப்பற்றி மக்கள் இதயத்தில் குடியிருந்த பயம் மலையேறிவிட்டது. அரசியற் கைதிகளும் பந்தோபஸ்துக் கைதிகளும் விடுதலைபெற்று வருகின்றனர். இவை யனைத்தும் சுபாஷ் சந்திரரின் கவனத்தை கவர்ந்தன. அன்னை வீட்டை இனிப் போய்க் காண்பது எந்த நாளோவென்று ஏக்கங் கொண்டு உருகி வாடி உயிர்நீக்குந் தருவாயில் கிடந்த கைதிகளை அவர் தம் தாய் நாட்டிற்கே திரும்பக் கொணர்ந்து விடுதலை செய்வித்த மகாத்மாவின் அற்புத ஆற்றலையும் கண்டு மகிழ்கிறார். இன்று சுபாஷ் சந்திரர் காந்திஜீயின் அஹிம்ஸா தருமத்தைத் தழுவிப் போற்று கிறார். சாத்வீகக் கொள்கையில் தமக்கு நம்பிக்கை பிறந்த காரணத்தைக் கொண்டே வங்காளத்திற்கு மகாத்மா விஜயஞ் செய்யத் துணிந்தாரெனவும் சுபாஷ் தேசமக்கட்கு அறிவுறுத்திக்கொண்டார். முன்னர் புரிந்த தீச் செயல்கட்கு எல்லாம் அமைதியும் சாத்வீகமுமான வழிகளிற் பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டுமென இன்று சுபாஷ் வங்க வாலிபர் களைக் கேட்டுக்கொள்கிறார். அந்தமான் சிறையிற் கிடந்து வாடும் இளைஞர்களை மீண்டும் தாய் நாடு சேர்ப்பிக்க வேண்டு மென்று அல்லும் பகலும் சிந்தனை செய்துகொண்டே இருந்த அருந்தலைவர் வைசிராய் விடுத்த அறிக்கைக்கு பதிலாக ஓர் அறிக்கை விடுத்தார். உண்ணாவிரதிகட்கு விட்டுக் கொடுப்பது ஓர் கெட்ட உதாரணம் என்பதே ராஜப்பிரதிநிதியின் கருத்து. ஆனால் சுபாஷ், “பெருந்தன்மையுடன் நடப்பதால் சர்க்கா ருக்கு கௌரவக் குறைவு ஏற்பட்டுவிடாது. சக்தியற்ற அரசாங்கமே எதிரியிடம் நியாயமாகவோ அல்லது பெருந் தன்மையுடனோ நடப்பதற்கு அஞ்சும்” என வாதித்தார்.

நாட்டின் நிலைமைமாறி புதிய அரசியல் நடைபெற்றுக் கொண்டிருப்பதனாலேயேதான் மத்திய சர்க்காருடனும், மாகாண சர்க்காருடனும் சுபாஷ் வாதிக்க நேரிட்டது. சர்க்கார் உண்ணாவிரதிகளின் காரியத்தில் விட்டுக் கொடுக்குமாகில் அஃது உண்ணாவிரதிகட்கு விட்டுக் கொடுத்ததாகச் சொல்ல முடியாது என்றும், அது பொது மக்களின் வேண்டுகோளுக்கு இசைய நடந்துகொண்டதே யாகுமெனவும் எடுத்துக் காட்டினார். "தற்போது நாட்டு மக்கள் எல்லோருமே கண்ணற்ற தீவினில் கிடந்துமாளும் தமது சகோதரர்களைத் தாய் நாட்டிற்கு கொண்டு வர ஒரு மனதாய் ஆதரிக்கின்றார்கள். பொது மக்களின் இத்தகைய கோரிக்கையைப் புறக்கணிக்கும் சர்க்காரை ஒரு போதுமே நாகரிக சர்க்கார் என்று கருத முடியாது," என்றார்.

வங்காள மாகாணத்தில் சுபாஷ் சந்திரரின் பேரால் ஒரு நிதி திரட்ட முயன்று வருகிறார்கள். தற்போது ஒரு லட்ச ரூபாய் திரட்ட உத்தேசம். இந்நிதியிலிருந்து ரூ. 50,000 ஓர் காங்கிரஸ் மாளிகை கட்டுதற்குச் செலவாக்கப்படும். இதிற் காங்கிரஸ் காரியாலயங்களும் ஓர் புத்தகாலயமும் நிறுவப்படும். அரசியல் பிரசாரகர்கள் அரசியல், பொருளாதாரம், தொழிலாளர் பிரச்னை ஆகியவற்றை நன்றாய் கற்றுணர்ந்து கொள்ளவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இப்புத்தகாலயம் அமைக்கப்படுகின்றது.

சுபாஷ் சந்திரரின் செல்வாக்கை விளக்கும் பிறிதொரு நிகழ்ச்சி இங்கே குறிப்பிடத்தகுந்தது. சுபாஷ் அலகாபாத்தில் பண்டித ஜவஹர்லால் நேருவின் விருந்தினராக இரண்டு நாட்களை அங்கேயே கழித்தார். அச்சமயத்தில் அங்குள்ள மாணவர்கள் ஒரு தனிக்கூட்டத்தில் அன்னவரை வரவேற்று உபசரிக்க வேண்டுமெனக் கருதி அவரை வேண்டிக் கொண்டனர். உடல் நிலை கருதி பாஞ்சாலத்திற்குச் செல்லும் தருண

மாயிருந்தபடியால் பாபு சுபாஷ் சிறிதும் அதற்கிணங்கவே யில்லை. இதைக் கேட்டு ஏமாற்றங் கொண்ட மாணவர்கள் ஓரிடத்திற்கூடி ஓர் தீர்மானம் நிறைவேற்றி அதன்கீழ் 2000 கையொப்பங்களைச் சேர்த்து அதனை ராஷ்டிரபதி ஜவஹரிடங் கொண்டு சென்றனர். நேருஜீ அதனை அம்மாணவர்களின் சார்பில் சுபாஷிடம் சமர்ப்பிக்கவே, அன்னவர் இறுதியாக அவ் வேண்டுகோளுக்கு இசைய வேண்டியதாயிற்று. எனவே, அன்றிரவில் புருஷோத்தம் தாஸ் பார்க்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி யிருந்தனர். அம்மாபெருங் கூட்டத்தில் சுபாஷ் சொற்பொழிவாற்றிவிட்டு பாஞ்சாலத்திற்குப் பிரயாணமானார்.

1937 அக்டோபர் கடைசி வாரத்தில் கல்கத்தா வெல்லிங்டன் சதுக்கத்தில் அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டி கூடியது. அக்கூட்டம் காங்கிரஸ் மகா சபையின் வருடாந்த வைபவத்தைப் போலவே யிருந்தது. அத்தகைய சிறப்பான ஏற்பாடுகட்குக் காரணமாயிருந்தவர் சுபாஷ் சந்திரரே யாவார். சுபாஷ் மிகுந்த நிர்வாகத் திறம் படைத்தவர். அத்துடன் தமது தியாகத்தின் சக்தியாலும் தேச நலத்தின் பொருட்டுத் தன்மீது வருவித்துக் கொண்ட துன்பங்களின் பெருக்கத்தினாலும் தேச மக்களின் மனதைக் கொள்ளை கொண்டிருக்கிறார்.

15. லண்டனில் சுபாஷ்

வகுப்புப் பூசல்களால் பிளவுபட்டுக் கிடந்த வங்க மாகாணக் காங்கிரஸ் கமிட்டியில் சுபாஷின் வருகையால் ஒற்றுமையும், ஒழுங்கும், கட்டுப்பாடும் அரும்பின. வங்க மாகாணத்தை முன்னணியில் கொணருதற்கு சுபாஷ் அரிய முயற்சிகள் செய்து கொண்டிருந்தார். கல்கத்தா நகர சபையின் ஆல்டர் மனாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கட்குத் தொண்டு புரிய காத்துக் கொண்டிருக்குந் தறுவாயில் அவரது உடல்நிலை ஏமாற்றத்தை விளைவித்து விட்டது. எனவே தமது உடல் நலங்கருதி நவம்பர் 18உ அன்று வியன்னாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். தமது டாக்டர்களைக் கலந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு ஜனவரி 11உ இங்கிலாந்திற்கு விஜயஞ் செய்தார். மறுதினம் பிற்பகல் செயின்ட் பாங் கிராஸ் நகரமண்டபத்தில் பாபு சுபாஷுக்கு ஓர் சிறந்த வரவேற்பு நல்கப்பட்டது. கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர். மிஸ்டர் ஆர். பால்மிட் தலைமை வகித்தார். சுபாஷ் பாபு தமது சொற்பொழிவில் காங்கிரஸ் மந்திரிகளின் நிலைமையையும் சமஷ்டி அரசியலைப்பற்றிக் காங்கிரஸ் வாதிகளின் அபிப்பிராயத்தைப் பற்றியும் தெளிவாய் எடுத்துரைத்தார். அவர் கூறியதாவது:

"காங்கிரஸ் வாதிகள் தங்கள் தேசிய லட்சியத்தைப் பெறுவதற்காகவே மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டார்கள். பதவிகளைத் தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை யிருக்குமளவும் காங்கிரஸ் மந்திரிகள் பதவிகளைத் தாங்கி வருவார்கள். மந்திரிகள் ஏகாதிபத்திய யந்திரத்திற்கு இரையாகிவிடும் நிலைமை ஏற்படாதவாறு காங்கிரஸ் காரியக் கமிட்டி அவர்களது நடைமுறைகளை மிகுந்த எச்சரிக்கையுடன் கவனித்துக் கொண்டே வருகிறது."

பின்னர் சமஷ்டி அரசியலைப் பற்றிப் பேசுங்கால், "முதலில் காங்கிரஸ் வாதிகள் மாகாண சுயாட்சியை எதிர்த்தனர். பின்னர் சில வாக்குறுதிகளின்மேல் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டனர். அதுபோலவே இறுதியில் சமஷ்டியையும் ஏற்றுக் கொள்வார்களென்று எண்ணுவதற்கில்லை. புதிய அரசியலில் மாகாணங்கட்கும் சமஷ்டிக்கும் பொதுவான அம்சங்களே இல்லை. மாகாணங்களில் எங்கட்குச் சிறிதளவேனும் அதிகாரம் நல்கப்பட்டிருக்கிறது. ஆனால், காங்கிரஸுக்கு உள்ளும் புறமுமாய் இருப்போர் அனைவரும் சமஷ்டித் திட்டத்தின்மீது சிறிதளவேனும் நம்பிக்கை கொள்ளவில்லை. முஸ்லீம் லீகினரும் சமஷ்டியை ஆதரிக்கலாகாதெனவே தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கின்றனர். ஆகவே, எதிர்கால நிலைமை அரசாங்கத்தார் சமஷ்டியின் சார்பாகக் கையாளும் முறைகளையே பொறுத்திருக்கிறது," என்றார்.

இந்திய விடுதலைப் போரின் இயல்பைக் கூறுங்கால் சுபாஷ் குறிப்பிட்டதாவது :—

"காங்கிரஸ் மகாசபையானது முன்னிருந்தது போல் ஏதோ சில தலைவர்களால் மட்டிலும் இயக்கப்படுவதோர் ஸ்தாபனமன்று. அது தற்போது ஓர் பெரிய ஜன சமூக இயக்கமாகப் பரிணமித்துவிட்டது.

"இந்தியர் போராட்டமானது, ஜனநாயகம், அபேதவாதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சீனு, ஸ்பெயின், அபிசீனியா முதலான தேசங்களின் மூலமாய் உலகெங்கும் பரவி வரும் சுதந்திரப் போராட்டத்தின் ஓர் அம்சமே யாகும். இவ்வுண்மையை இந்தியாவின் தலைவர்கள் உணர்ந்து வருகின்றனர்.

"தற்போதையக் காங்கிரஸ் தலைவர்கள் இப் போராட்டத்தில் தலையிட்டு அதனைத் தொடர்ந்து நடத்தாவிடில் இந்தியாவில் புதுத் தலைவர்கள் தோன்றுவது திண்ணம்.

" இங்கிலாந்திலுள்ள எந்த அரசியல் கட்சியினிடமிருந்தாவது உதவியை எதிர்பார்த்துக்கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. அரசியல் உலகில் இந்தியா சீரழிந்ததற்குக் காரணம் அஃது வெளியுலகத் தொடர்பின்றி தனித்து நின்றதேயாகும். வெளிதேசங்களின் அட்டூழியங்களை தடைசெய்ய வேண்டுமெனின் இந்தியா தனித்து நிற்றல் கூடாது. வெளியுலகத் தொடர்பு ஓர் ஜீவாதாரமான பிரச்னை என்றே நான் உறுதியுடன் நம்பியிருக்கிறேன். வெளிநாட்டு அரசியல் நிலைமைகளை இந்தியா செவ்வனே அவ்வப்போது தெரிந்துகொள்ள வேண்டும்."

பின்னர் அயல் நாடுகளில் குடியேறியுள்ள இந்தியமக்கட்கு ஓர் விண்ணப்பஞ் செய்து கொள்ளுங்கால், வெளி நாடுகளிலுள்ள இந்தியர்கள் அத்தேச மக்களுடன் கூடியவரை நெருங்கினதொடர்பு வைத்துக்கொண்டு தங்கள் கௌரவத்தையும், சுயமரியாதையையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

எதிர்காலத்தைப் பற்றி பாபு சுபாஷ் சந்திரர்க்கு அதிக நம்பிக்கை கிடையாது. 1930-ம் வருடத்தின் நிலைமை மீண்டும் தலைகாட்டி விடுமோ என்ற சந்தேகம் அன்னவரை விட்டபாடில்லை.

"இந்திய மக்கள் தமது அரசியலைத் தாமாகவே நிர்ணயித்துக் கொள்ள அனுமதி கோருகின்றனர். அவ்விருப்பத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாகில், இந்தியாவும் பிரிட்டனும் சிறந்த நண்பர்களா யிருப்பார்கள்," என்பதை சுபாஷ் அக்கூட்டத்தில் வற்புறுத்திக் கூறினார்.

லண்டனில் ஜனவரி 12-ம் நாள் இரவு 12 மணிக்கு பாபு சுபாஷ் தெ-வாலராவை அவரது விடுதியில் சந்தித்துப் பேசினார். பழைய நண்பர்களாகிய இவ்விருவரும் இரண்டு மணி நேரம் வரையிலும் அன்புடன் உரையாடிக்கொண்டிருந்தனர்.

மிஸ்டர் தெ-வாலரா அயர்லாந்தைத் தற்போதைய நிலைமைக்குக் கொண்டு வருவதற்குக் காரணமா யிருந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறினார். பாபு சுபாஷ் இந்திய அரசியற் போராட்டத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை விரிவாக விளக்கினார்.

சுபாஷ் சந்திரர் வெளிநாடுகளில் இருக்கும் போதெல்லாம் தமது உடல் நோயைப் பொருட் படுத்தாமல், இந்தியாவைப்பற்றின பொய்ப் பிரசாரங்களைக் கண்டித்துக்கொண்டே வந்திருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவிலும், கிழக்கு ஆப்பிரிக்காவிலும் குடியேறி யிருக்கும் இந்தியர்கள் அங்குள்ள வெள்ளையர்களால் இழிவாக நடத்தப்பட்டு வருகின்றனர். இன்று இந்தியா ஓர் சுதந்தர நாடாக இருப்பின் நம்மக்கள் அவ்வாறு அலக்கழிக்கப் படுவரோ என்றுதான் நம் தலைவர் சித்தங் கலங்குகிறார். பிறந்த வீட்டில் மதிப்பில்லாதானை அயலாரும் மதியார்களல்லவா? ஆகவே நமக்கு எதிர் நடவடிக்கை எடுக்குஞ்சக்தியிருக்குமாகில் பிறநாடுகள் நம்மைக் கண்டு அஞ்சுமல்லவா? அந்தோ, ஸான்ஸிபாரில் இந்திய லவங்க வர்த்தகர்கள் படும் பாட்டைக் கேட்டும் வாய் திறவாமலன்றோ இருக்கிறோம்? இந்தியா லவங்க இறக்குமதியை தற்போது அடியுடன் தடுத்துவிடுவோமாகில் ஸான்ஸிபார் அதிகாரிகள் நேர்மையான வழிக்கு வந்து விடுவார்களல்லவா? ஓட்டவா ஒப்பந்தத்தால் விளைந்த தீமையைத் தடுக்க நம்மால் ஒன்றுமே செய்தற்கு இயலாது போயிற்று. தமது கோரிக்கைகளை செவிமடுக்கத் தயங்கும் ஓர் அரசாங்கத்தினிடம் நேசபான்மையை வளர்த்து வருதல் எங்ஙனம்? இந்தியாவில் பிரிட்டிஷ் வர்த்தக ஆதிக்கம் ஓங்கி யிருக்கும் வரையிலும் அதன் சார்பில் இந்தியர் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கிக் கொண்டுதான் இருக்கும். இத்தகைய நிலைமைகளை எல்லாம் சுபாஷ் அயல் நாட்டு மக்கட்குச்

சமயம் வாய்த்த போதெல்லாம் எடுத்து விளக்கிக் கொண்டே வந்தார்.

சுபாஷ் பாபுவின் வருகையை முன்னிட்டு லண்டனில் நடைபெற்ற கூட்டங்கள் அனைத்திலும் மிகப் பெரிது காக்ஸ்டன் ஹாலில் நடைபெற்ற வைபவம். இக் கூட்டத்திற்கு மிஸ்டர் ஜார்ஜ் லான்ஸ்பரி தலைமை வகித்தார். இம் மாபெரும் கூட்டத்தின் ஆரம்பத்திலே பாபு சுபாஷ் சந்திரர், வருகிற ஹரிபுரா காங்கிரஸ் சபைக்குத் தலைவராய் எதிர்ப்பின்றித் தேர்ந்தெடுக்கப்பெற்ற செய்தி ராய்டர் பிரதிநிதியின் மூலமாக அறிவிக்கப்பட்டது. கூட்டத்திற் கூடியிருந்த மக்களனைவரும் காதுகள் செவிடுபட கரகோஷம் செய்து இச் செய்தியை வரவேற்று மகிழ்ந்தனர்.

இதனை அறிவித்த ராய்டர் பிரதிநிதியிடம் சுபாஷ் சந்திரர் பின்வருமாறு தெரிவித்தார்:

"இந்த மகத்தான கௌரவத்தைப் பெற நான் எவ்விதத்திலும் தகுதி யுடையவனென்று எண்ணத் தக்கவாறு அத்துணை அகந்தை கொண்டவனல்ல. இப் பெருமை தேசீயப் போராட்டத்தின் முன்னணியில் நின்று மிகவும் துன்பத்துக்குள்ளான இந்திய வாலிபர்கட்கு அளிக்கப்பட்ட ஒரு பாராட்டாகவே நான் கருதுகிறேன்.

"ஹரிபுரா காங்கிரஸ் எத்தகைய முடிவு செய்யக் கூடுமென்றோ பிறகு என்ன நடக்குமென்றோ யான் இப் பொழுது சொல்வது முறையன்று. ஆனால் காங்கிரஸிலுள்ள எல்லாக் கொள்கையாளர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியில் ஒன்றுபட்டு நின்று, இன்னும் வெகுதூரத்திலிருந்து வரும் சுதந்திரத்தைப் பெறுதற்குரிய போராட்டத்தை மேற்கொண்டு நடத்திச்செல்ல வேண்டுமென அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளார்.

" இந்தியாவைப்பற்றி வெளியுலகத்தினர் இன்னும் போதுமானபடி உணருமாறு பிரசாரம் செய்ய வேண்டு மென்பதையும் எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ளார். ஆழ்ந்து நோக்குவதாயின் இந்தியப் பிரச்னைகளும், உலகப்பிரச்னைகளும் ஒன்றேதான். நாம் வெளி நாடுக ளிலுள்ள முற்போக்கான இயக்கங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதால் நமது விமோசனத்திற்கு மட்டு மன்றி, துன்புற்று உழலும் எல்லா உலக மக்களின் விமோசனத்திற்கும் அடிகோலுவதாகும்.

"எனது தேசமக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் கொண்டு நான், எனது தாய்நாட்டுக்கு முன்னிலும் சிறந்த ஊழியம் புரிவதற்கு அருள்புரிய வேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கிறேன்."

16. ராஷ்ட்ரபதி போஸ்

காங்கிரஸ் தலைவர்களின் சரிதைகளை ஆராய்ந்து பார்த்தால் பாபு சுபாஷ் சந்திரரைப் போன்று தாய் நாட்டிற் காகத் தியாகஞ்செய்து துன்புற்றவர்கள் வேறெவருமில்லை என்றே சொல்லவேண்டும். சிறைவாழ்வு, காச நோய், தேசப் பிரஷ்டம், ஆகியவைகள் இவரது பிறப்புரிமை களைபோல் இவரை விட்டணுகாமலே இவரைப் பின் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. இவர் அரசியல் போராட் டத்தில் தலையிட்டு பதினேழு வருடங்களாகின்றன. இதற் கிடையே ஐந்து வருடங்களைத் தவிர எஞ்சிய காலமெல்லாம் சிறையிலும் தேசப் பிரஷ்டத்திலேயுமே கழித்தார் இத் துணை தியாகம் செய்த இவ் வங்கதிலகம் பண்டித ஜவகரால் அழகு செய்யப்பெற்ற காங்கிரஸ் அரியணையின்மீது அமரப் போகின்றார் எனின் அஃது ஓர் அதிசயமான காரியமன்று.

தந்தையார் பிரிவின் போதும் அவர் பக்கத்தில் இருக்க வில்லை! தம் தாயாரின் இறுதிக்காலத்திலும் அன்னவள் தரிசனம் கிடைக்கப்பெற்றாரில்லை! தவிர நாற்பத்தொரு வயதாகியும் இன்னும் விவாகத்தைப் பற்றிய சிந்தனையே அவருள்ளத்தில் குடிபுகவில்லை. எல்லா வாழ்க்கை இன்பங் களையும் அனுபவிப்பதற்கேற்ற இளம்பருவத்தை அன்னை பணிக்கென அர்ப்பணம் செய்தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் அருள்மொழிக்கு இலக்காகவே திகழ்கிறார் நம் பாபு சுபாஷ்! ஆகவே இந்திய மக்கள் அன்ன வர்க்கு வையகத்தையும் வானகத்தையும் ஒருங்கே அளிப்பி னும் அவர் புரிந்த தியாகத்திற்கு அவை ஈடாகாது!

இச்சமயத்தில் பாபுவைக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந் தெடுத்தது மிகப் பொருத்தமானதோர் காரியமாகும். தற் போது பாபுஜீ மகாத்மாவின் சாத்விகப் போராட்ட முறை

யில் குன்றாத நம்பிக்கை கொண்டிருக்கிறார். பாபு சுபாஷ் இன்று பாரத நாட்டு இளைஞர்களின், சிறப்பாக வங்க யுவர்களின் உள்ளக் கோவிலிற் குடிகொண்ட தெய்வமாய்த் திகழ்கிறார். பயங்கர இயக்கத்தில் ஈடுபட்டுவந்த வங்க வாலிபர்களிற் பலரை நல்வழிக்குத் திருப்பிய பெருமை அவருக்கு உண்டு.

தவிர சுபாஷ் பாபு சிறந்த மதிநுட்பமும், அரசியல் ஞானமும் பெற்றவர். சிறை வாழ்க்கையிற் சிக்கிக்கொள்ளாமல் இருந்திருப்பாராகில் இதற்கு முன்னரே ராஷ்ட்ரபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பார். வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணஞ் செய்து, பல பேரறிஞர்களுடன் பழகி, முதிர்ந்த அரசியல் ஞானம் பெற்றிருக்கிறார். சர்வதேசங்களிலும் செல்வாக்குடையவர். இளைஞர்க்குரிய ஊக்கமும், முதியோர்க்குரிய அறிவும் வாய்க்கப் பெற்றுள்ளார். இவரது நிர்வாகத் திறமையையோ வெளிற் கூறவேண்டியதில்லை.

ஆனால், சுபாஷின் அரசியற் கொள்கையைப்பற்றி அறிய எல்லோரும் ஆசைப் படுவார்கள். சுபாஷ் சந்திரரின் பழைய கொள்கை பழுத்த அபேதவாதமேயாகும். ஆயின் தேசத்தின் நிலைமைக்கு ஒத்தபடி, அனுபவ சாத்தியமான அரசியற் திட்டங்களை அனுசரித்து அவர் தமது கொள்கைகளைக் கையாண்டு வருகிறார். பாபு ஓர் அபேத வாதியே யாயினும் காங்கிரஸ் கொள்கைக்கும் லட்சியத்துக்கும் எதிரான வழியில் தமது அபேத வாதத்தைச் செலுத்த மாட்டார். தாங்கப் போகும் பதவியின் பொறுப்பை நன்குணர்ந்தே சுபாஷ் சந்திரர் தமது செயல் முறைகளை வகுத்துக் கொள்வார்.

ஜவஹரின் தலைமையில் காங்கிரஸ் அமைப்புகளின் நிர்வாகத்தில் எத்துணை ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவியதோ அதற்கு எள்ளளவுங் குறையாத நிர்வாகத் திறமையே பாபு சுபாஷின் காலத்திலும் விளங்கும் என்பதற்குச் சந்தேக

மில்லை. ஆகவே, சுபாஷ் போஸின் அறிவு ஆற்றலினால் நம் தேசிய மகா சபையின் பெருமையும் சக்தியும் பன்மடங்கு பெருகி வளர வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

17. வங்கத்தாய்

சுபாஷ் சந்திரரின் வாழ்க்கை வரலாற்றை வரைபவர்க்கு அவரது பிறப்பினால் உயர்வுபெற்ற வங்க நாட்டை மறத்தல் அரிது. 'துஞ்சும் போதும் தாயின் தொண்டை நினைந்திடும் வங்கத்தினர்' என்று பாரதியார் பாடினார் எனில் அஃது மிகைபடக் கூறியதாகாது. இந்தியாவில் வைசிராயாக யிருந்த லார்ட் கர்ஸான், "இந்தியாவில் இரத்தினம்போன்று பிரகாசிப்பவர்களும், எல்லாத் துறைகளிலும் முன்னின்று மிளிர்கின்றவர்களும் வங்காள மக்களே" என்று காலஞ்சென்ற கோபால கிருஷ்ண கோகலேயிடம் வியந்து கூறினார்.

பிரம சமாஜத் தலைவரும், சமூக சீர்திருத்த வாதியும், உடன்கட்டை ஏறுதலெனும் கொடிய வழக்கத்தை நிறுத்திய வருமான பெரியார், ராஜாராம் மோகன் ராய்க்குப் பிறப்பு ஈந்த நாடு எது? இந்து சமயத்தின் வேதாந்த சாரத்தை மேனாட்டினர்க்கு எடுத்துரைத்து, இந்தியரின் புராதனப் பெருமையை விளக்கியவரும், பிரசங்கக் களஞ்சியமென கொண்டாடப் படுபவருமான வேதாந்த சிங்கம், சுவாமி விவே கானந்தரைப் பெற்றளித்த திருநாடு எது? அவர்தம் குரு பரம ஹம்ஸதேவரின் அருள் பொங்கிய நாடு எது? ஆசியா வின் கவியரசரும், நோபல் பரிசு பெற்றவருமான ரவீந்திர நாதரின் அறிவுப் பிரகாசம் பொருந்திய உயர்நாடு எது? தாய் நாட்டுத் தொண்டின் பொருட்டு பெறுதற்கு அரிய பெரும் பொருளையும் தூவென்று உதறித் தள்ளிய வள்ளலும் கோடையிடிபோல் சொன்மாரி பொழிந்தவருமான சித்த ரஞ் சனரின் கொடை மழையால் வளம்பெற்ற தரும நாடு எது? வங்காளப் பிரிவினையின் போது தமது பூகம்பச் சொற்பொழி வுகளால் ஏகாதிபத்தியத்தை திடுக்கிடச் செய்த சுரேந்திரநாத பானர்ஜீயும், விபின சந்திரபாலரும் எழுப்பிய சுதந்திரநாதத்தி

ஞல் அதிர்ச்சியுற்ற விறல் நாடு ஏது ? விஞ்ஞான ஆராய்ச்சி யால் ஜகத்தை பிரமிக்கச் செய்த ஜகதீஸ் சந்திரரையும் சகல கலா வல்லபரும் ரசாயன பண்டிதரும், நித்தியப் பிரமசாரிய மான ஆசார்யா பி. ஸி. ரேயை உவந்தளித்த உயர்நாடு எது ? அதுவே தியாகக்கனலிற் கனிந்த கனியும், வாலிபரின் முது கெலும்பும், சுதந்திரச்சந்திரனுமாகிய சுபாஷ் சந்திரனின் உத யத்தால் விளக்கம் பெற்ற வங்கதேசம், எனப்படுவது. அத் தகைய சான்ருண்மை மிக்க புத்திரர்களைப் பெற்றெடுத்த வங்க அன்னை வாழ்க! அவள் உதிரத்து உதித்தெழுந்த வீரர் வாழ்க !!

வந்தே மாதரம் !

The Jupiter Press, Madras.